
# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 13<br>இதழ்: 8 | பிலவ ஹூ கார்த்திகை மீ<br>நவம்பர்–டிசம்பர் '61 | வருட சந்தா<br>ரூ. 3-00 |

மகிழ மரத்தடியில் சங்கிலிமுன்
சுந்தரர் சத்தியம் செய்தல். (பக்கம் 359)

## உள்பொருள்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தூணில் தோன்றிய தோன்றுத்துணை (திருப்புகழ்மணி) | 337 |
| 2. | குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) | 341 |
| 3. | தாளைப் பணியும் தவம் (கி. வா. ஜ.) | 344 |
| 4. | விராலிமலை திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) | 349 |
| 5. | கண் இழந்து மீளப்பெறுதல் (கி. வா. ஜகந்நாதன்). | 359 |
| 6. | எவர் மேலும் பிழையில்லை (ரஸபதி) | 365 |
| 7. | உபநிஷதங்களின் உள்ளொளி (ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி) | 371 |
| 8. | முசுகுந்தர் (தணிகை. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.) | 379 |
| 9. | TIRUPUGHAZH (*Thiruppugal Mani*) | 383 |

### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 விதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

| | | |
|---|---|---|
| மலர் 13 | பிலவஹு கார்த்திகைமீ<br>நவம்பர்-டிசம்பர்—1961 | இதழ் 8 |


## தூணில் தோன்றிய தோன்றாத் துணை

(திருப்புகழ் மணி)

மங்கையர்க ளனைவரும் வள்ளிபோல் ஆகவேண்டும். தாயுள்ளமே வள்ளி. தன்னலமற்ற பேரன்பு நிறைந்த உள்ளமே தாயுள்ளம். தாயன்பு மங்கையரிடம் இல்லாவிட்டால் திண்டாட்டந்தான். ப்ரஹ்லாதன் பக்திக்கிரங்கித் தூணில் தோன்றினான் ஹரி. அதேபோல், ப்ரபுட தேவ மகாராஜன் காலத்தில், அருணகிரியாரின் அன்பில் தோன்றிய பாடலுக்கிரங்கிக் கம்பத்தில் தோன்றினான் கந்தன். உயிரற்ற கற்றூணில் தோன்றிய ஆண்டவன் உயிர்க்கம்பமாகிய மனித ருள்ளத்தில் தோன்றாமலா யிருப்பான்? கல் தூண் போன்ற கடினமான நெஞ்சத்தைப் பக்தியினால் பிரகலாதனைப் போல் கரைத்துருக்கினால், அருணகிரியாரைப் போல் அன்பினாலுருகிப் பாடினால், அந்த உள்ளத்தி லிருந்து பூவினும் மெல்லிய புண்ணியனாகிய பரமன் தோன்றுவான்.

---

எண்ணுதற்குத் தக்கவரை என்றும் மறைத்துவைத்தல்,
கண்ணான சூரியனைக் கையால் மறைப்பதுவே.

"பரத்தப் பாலுக் குரியோனே! ஜெகத்தில் ஜோதிப் பெருமாளே" என்றார் அருணகிரியார் முருகனை.

பரமாகிய முருகன் அன்பர்களின் அன்பினால் இழுக்கப்பட்டு, பரவெளியி விருந்து இறங்கி ஆகாசத்திற்கு வருகிறான். பிறகு முறையே ஐந்து பூதங்களிலும் நுழைந்து உருககொள்ளுகிறான். பரவெளியிலுள்ள முகமொன்றும், மற்ற பூதங்களிலுள்ள முகங்களைந்தும் சேர்ந்து முருகனுடைய முகம் ஆறாகிறது.

வள்ளி வேங்கை மரத்தைக் கண்டாள். அதன் மேல் முருகாவென்று சாய்ந்து கொண்டாள். முருகன் மேல் சாய்ந்த இன்பத்தில் தன்னை மறந்தாள். முருகனும் மரத்தை மறைத்துத் தன் சுய உருவில் நின்றானும். கண் விழித்துப் பார்த்த வள்ளி திகைப்புற்று, நீ யாரென்றாள். முன் வேடனாய் வந்தவனும், இங்கு மரமாய் நின்றவனும் நான்தான் என்றான். எங்கும் நிறைந்த முருகன் மரத்திலும் இருக்கும் உண்மையை இங்கு வள்ளிக்கு உணர்த்தினான். வள்ளி யார்? ஜீவர்களின் பிரதிநிதி யன்றோ? வள்ளியின் மூலமாக ஜீவராசிகளுக்கு ஜீவப்பிரம்ம ஐக்கியத்தை யுபதேசித்தான் முருகன். அர்ஜுனன் மூலமாக அதே தத்துவத்தை யுபதேசித்தான் கண்ணன். அவதார புருஷர்களின் செயல்களெல்லாம் தத்துவ விமரிசனமாகவே யிருக்கும்.

கண்ணன் கோபிகளுடைய ஆடைகளைத் திருடிவிட்டானும். இதன் தத்துவமென்ன? உலகத்திலுள்ள, ஆசா பாசங்களுக்குக் காட்டாமல் உடலை

---

உத்தமரைக குற்றம் உரைப்பாரை, எந்நாளும்
பொததும் வினைபபாரம், பொங்கிவந்து போர்த்திடுமே.

மறைப்பதே உடை. மரம் செடிகளுக்கும் விலங்கினங் களுக்கும் உடையில்லை. அவற்றிற்குப் பேதமில்லை. பேதத்திற்குத்தான் மறைப்புண்டு. அபேதத்திற்கு மறைப்பே யில்லை. வள்ளலார் ஆண்டவனுக்கே யுரியதாகிய தன்னுடம்பில் உலகத்திலுள்ள ஆசா பாசங்கள் புகாம லிருப்பதற்காக, ஒரு வெள்ளைத் துணியால் உடல் முழுவதும் மூடிக் கொண்டார்.

கோபிகள் ஆடைகளைக் கரைமேல் வைத்து யமுனையில் நீராடினார்கள். யமுனை நீர் நாராயண ஸ்வரூபம் என்பதை அவர்க ளுணரவில்லை. கரை மேல் வந்ததும் ஆடைகளைக் காணாமல், உடலை மறைத்துக் கொண்டு கண்ணனை ஆடைகளைத் தரும் படிக் கேட்டனராம்.

கண்ணன் நகைத்து, பைத்தியக் காரிகளா! உலகத்திலுள்ள ஆசைகளாகிய பிசாசங்களுக்குக் காட்டாமல, ஆடையா யிருந்து உங்கள உடலை மறைத் திருப்பவன் நானன்றோ? உங்களுக்கு மறைப்பா யிருந்து, உலகத்திட யிருந்து உங்களைக காப்பாற்றும் எனக்கு, உங்கள் நக்னத்தை எப்படி மறைக்க முடி யும்? நீங்கள் குளிக்கும் நீராயும், கரைமேல் வைத்த ஆடையாயு மிருப்பவன் நானே தான். உங்கள் நக்னத்தை மட்டுமன்றி உங்களுள்ளத்தையும், ஒவ் வொரு நிமிஷமும் உங்களைவிடத் தெளிவா யுணர்ந்து கொண்டிருக்கிறேன். உங்கள் உணர்ச்சிக்குள் ளிருந்து, உங்கள் எண்ண மனத்தையும் உணரும் என்னிடம், உங்களை மறைப்பதாக நீங்கள் நினைப்பதே அறியாமையாகும் என்று கூறினாராம். துரியோத னதிகளால் மானபங்கம் கொடுத்தான்; தன்னை

---

நாணமே பெண்மைநலம்; நற்சுவையே உண்டிவளம்
கோணையென ஆயின், அவர்வாழ்க்கை குன்றும்மே.

மறந்து "கிருஷ்ணா!" என்று கதறினள் ஆடை களாகத் தோன்றி அவளைக் காப்பாற்றினன் கண்ணன்.

கண்ணன், தான் எங்கும் நிறைந்து எல்லாமுமா யிருக்கும் பரப்பிரம்ம ஸ்வரூபமே என்பதை கோபிகா வஸ்திராபஹரணத்தின் மூலமாயும், திரௌபதியைக் காத்ததன் மூலமாயும் உணர்த்தினன். ஆண்டவன் நம்மைக் கருவியாய்க் கொண்டு அனுபவிக்கிறான். நாம் அவனுடைய கருவி. நாம் அனுபவிக்கும் அனுபவங்க ளெல்லாம் அவனுடையன என்று உணர்வதே பேரின்ப மாகிய மோக்ஷம். முருகா! முருகா வென்று சொல்லும் பொழுது அக்நாம ரஸமா யிருந்து அவன் நம்மை யனுபவிக்கிறான். அவனே நாம் அனுபவிக்கிறோம். இதுவே ஜீவப்பிரம்ம ஐக்கியமாகிய முக்திநிலை. இந்த நிலையி லிருப் பதற்கு உதவி செய்வது தொண்டர் கூட்டமே. நாமனைவரும் கூடி முருக நாமத்தைச் சொல்லுவோம். முருகா! சரணம்.

சுபம்.

---

வித்திலதேல், எனறும் விளைவில்லை; கைப்பொருள்தான
இத்தரையில் இன்றேல், இருந்தபிணம் என்பாரே.

## குமாரஸ்த்வ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

5. ஷட்கோண பதயே நமோ நம ; ஷட் - ஆறு. கோண பதயே - கோண சக்கரத்தில் (எழுந்தருளியுள்ள) தலைவனுக்கு ; நமோ நம - போற்றி போற்றி. அறுகோணத் தலைவனுக்குப் போற்றி போற்றி என்பது இதன்பொருள்

உபாசனை முறை :

குருவருளின்றி அருள் வரலின்றே' என்பது பாம்பனடிகளின் ஞான வாக்கியம். ஆதலின், ஒரு குருவின் மூலம் உபதேசம் பெறுவது அவசியம். ஆசிரியன் உபதேசம் செய்யும்போது, அதற்குரிய உபாசனா மூர்த்தியையும், அவரது திருவுரு, சிறப்பியல் முதலியவற்றோடு அவருக்குரிய மந்திர முதலியவற்றையும் விளக்கிக் கூறுவான். இம்முறையிலே அம் மூர்த்தியை மந்திர பூர்வமாக அமைக்கத் தகக யந்திரங்களையும் குறிப்பதுண்டு. ஆறுமுக அண்ணலுக்கு அமைந்தது அறுகோண யந்திரம். தேவிக்குரியது 43 கோணமுடையதென்றும் வேறுபடவும் கூறுவர். இவ்வித அறுகோணமாக அமைதத மநதிர பீடத்தில் முருகவேள எழுந்தருளி யிருந்து அருள் புரிவர். சண்முகருக்கு உரிய சகசசிர நாமத்திலும்,

"ஷட்கோண மத்திய நிலயாய நம:" என்ற ஒரு திருநாமம் படிக்கபபடுகிறது. இவ்வித அறுகோண சக்கரம் ஓங்காரமான பிரணவத்தின் நடுவில் அமைககப்படும். ஆடு மயிலும் தனி மந்திரமான பிரணவ ரூபமுடையது. அதன்மேலமரும் குமாரபிரான் பிரணவ நடுவான அறுகோண சக்கரத்தில் எழுந்தருளுபவன்.

---

முதலிலதேல், எத்தொழிலும் முன்னேற என்று,கடன்
நிதம்வாங்கிச் செய்முயற்சி, நீணிலத்தில் தீங்காமே.

" அதல விதலமுதல் கிடுகிடு கிடுவென
வருமயில் இனிதொளிர் ஷடுமையில் நடுவுற
அழகினுட னமரும் அரகர சிவசிவ—பெருமாளே "

என்ற திருவேங்கடத் திருப்புகழ் கூறுவது நோக்குக.

எனவே, அறுகோணத் தலைவன் என்கிறார் பாம்பன் அடிகள். ஆறுமுகனை ஆறுகோண சக்கரத்தில் வைத்து வழிபடுவது பொருத்தந்தானே !

6. ஷட்கோச பதயே நமோநம:

ஷட் - ஆறு; கோசம் - கோசங்களினுடைய, பத்யே தலைவனுக்கு; நமோநம - போற்றி போற்றி.

(i) கோசம் ஆறு :

கோசம் என்பது செல்வம் என்று பொருள்படும். ஷட் + கோசம் - ஆறு செல்வங்கள். அவைகள முறையே அரசு. சுற்றம், பொன், நெல், கல்வி, வாகனம் அல்லது அடிமை எனப்படும். இவ்வித ஆறு செல்வங்களுக்கும் தலைவன் முருகன் என்க. புலமை, தவம், புகழ், போகம், ஞானம், முத்தி என்ற ஆறு செல்வங்களும் கொள்ளலாம். எனவே மேற்சொன்ன செல்வங்களுக்கு எல்லாம் நமது குகவேள் தலைவன். ஆதலால் அவனை வணங்குவோர் அச் செல்வங்களனைத்தையும் பெறுவார் என்றறிக. செல்வம் முதலிய எல்லாச் சிறபபுக்களும் கந்தனுதன் கழலிணையைக் கை தொழுதமையாலேயே வநதன.

" சிறபபுளார்கள் சிறப்பெலாம்
இறப்பிலா உன் இணைபபதம்
குறித்த நோற்ற குறிப்பலோ
பொறிசசமீக புரத்தனே " (பாம்பனடிகள்)

---

பன்னாள் ஒருமை பழகினுர் தம்மிடத்தும,
எனனுளும் நன்னயமாப் பேசல் இயலபாமே.

(ii) கோசம் - புத்தகம் - சாத்திரம் அல்லது தோத்திர நூல்கள்.

ஷட்கோசம் என்பது அறுசமய சாஸ்திர நூல்கள் என்று கொண்டு, அறுசமய நூல்களின் (உட்பொருளா யமைந்த) தலைவன் என்று கூறுக. "அறுசமய சாத்திரப் - பொருளோனே". ஷட்கோசம் என்பது ஆறு தோத்திர நூல்கள் என்னில், பாம்பனடிகளால் 'ஒருவனையே புகழ்ந்த அருள் அருணகிரி' எனப் புகழப்பட்ட முனிவரது தனிப்பெரு நூல்கள் கந்தரந்தாதி, கந்த ரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், திருவகுப்பு, திருவெழுகூற்றிருக்கை என்ற ஆறு நூல்களைக் கொள்ளலாம். ஏனெனில் பாம்பனடிகளுக்கு நம் அருணகிரியாரிடத்திலும் அவரது அரிய தோத்திரப் பனுவல்களிலும் தனிப்பட்ட ஈடுபாடு உண்டு. ஆக்கியோன் குறிப்பு இப்படி இருக்கக் கூடும். (அல்லது) பாம்பனடிகள், தாம் அருளிய நூல்களை ஆறு மண்டலங்களாகப் பிரிவு செய்துள்ளனர். ஆகவே, 'பன்னிரு வாகுவில் என் சொல்லை புனையும் சுடர் வேலவனே' என்றதுபோல, ஆறுமுகனுக்கெனப் பாடிய 6666 பாடல்கள் கொண்ட ஆறு (மண்டல) நூல்களின் தலைவன் என்றும் பொருள் கொள்ள இடமிருக்கிறது. இதுகாறும் கூறியதிலிருந்து நம் குமர புகவன் ஆறுவகைப் பேறுகளுக்கும், ஆறு சமயம் அல்லது ஆறு வகையான சாத்திர தோத்திர நூல்களுக்கும் தலைவன் என்பதும் விளங்குகிறது.

(iii) கோசம் - தாமரை; குசம் என்ற தாதுவி னடியாகப் பிறந்தது. நமக்குள் இருக்கும் ஆதார கமலங்கள் ஆறு ஆகும். அவை,

மூலாதாரம்—(குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவிடம்) நாலிதழ்க் கமலம்

---

ஆத்திரக் காரர்க்குப் புத்திமட்டு ; ஆவதெல்லாம்
கோத்திரத்தில் போந்த குறையென்று கொள்மனமே.

சுவாதிட்டானம் (அடிவயிறு)—ஆறிதழ்க் கமலம்
மணிபூரகம் (உந்தி)—பத்து இதழ்க் கமலம்
அனாகதம்—(இதயம்) பன்னிரண்டிதழ்க் கமலம்
விசுத்தி—(கண்டம்) பதினாறு இதழ்க் கமலம்
ஆக்ஞை—(புருவமத்தி) மூன்றிதழ்க் கமலம்.

இதன் விளக்கம் தத்துவ தீபிகை என்ற நூலில் காணலாம்.

இனி ஷட்கோசபதயே என்றால், ஆறு ஆதார கமலத்து (அதிதேவதைகளின்) தலைவனுக்கு என்னும் பொருள் கிடைக்கிறது. செவ்வேள் ஆருதாரத் தெய்வம் என்பதனை

"வீருதாரா ஆருதாரா" எனவும்,
"ஆதாரத் தொளியோனே" என்றும்,
"நாலிரண்டிதழாலே" என்ற பொதுத் திருப்புகழும்
"நாலு சதுரத்த" என்ற

புலியூர் திருபபுகழும் கூறுவதும் சிந்திக்கத் தக்கன.

ஆதார கமலங்கள் ஆறின் தலைவ! உனக்கு வணக்கம் என்றும் பொருளாகிறது.

---

அனுபூதி விளக்கம்

## தாளைப் பணியும் தவம்

(கி. வா. ஜ.)

அருணகிரி நாதர் முருகன் திருவருளால் தாம் பெற்ற அநுபவததை அடிக்கடி சொல்லி வியப்பில் மூழ்குவார். அவனுடைய திருவருள் பெருமல ஆசைக் கடலில் அழுந்திப் பல வகையான அல்லல்களுக்கு ஆளாகிறவர்களே உலகிற் பெரும்பாலோர். அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் அத்தனைப் பெருங்கூட்டத்தில, தகுதி இல்லாத தமக்கு இறைவன் அருள்

---

அஞ்சாமல் தீமைசெயும் அப்பாவக கூட்டநதான்,
கொஞ்சி மறுபிறப்பில், கொக்கரிகளும் என்றறியே.

செய்து வாழ வைத்தானே என்பதை எண்ணும் போதெல்லாம் அவருக்கு வியப்பு மீதூர்கின்றது. 'இறைவன் அருளியவாறு என்னே!', 'நான் இந்த அநுபவம் பெற்றவாறு என்ன அதிசயம்!' என்று ஆச்சரியப்படுவார். அந்த ஆச்சரியத்தில் வார்த்தைகள் முழுமையாக வெளிவருவதில்லை. 'பெற்றவாறு என்ன அதிசயம்!' என்று சொன்னால் முழுமையாகச் சொன்னதாகும். சற்றே குறைந்து, 'பெற்றவாறு என்னே!' என்றால் ஓரளவு சொன்னதாகும். ஆனால் அவர் அப்படிச் சொல்கிறதில்லை. சொல்லுகிற மாதிரியிலே அவருடைய அதிசய உணர்ச்சி புலனாகிறது. 'பெற்றவா!' என்ற அளவிலே சொல்லி நின்றுவிடுவார். அதற்கு, 'பெற்றவாறு என்ன அதிசயம்!' என்பதுதான் பொருள். அந்தப் பொருளை விட அவர் உள்ளத்தில் வியப்புணர்ச்சி எவ்வாறு பொங்குகிறது என்பது, அப்படிச் சுருக்கிச் சொல்வதில் தெளிவாகத் தெரிகிறது.

"பேரம் கெடமெய்ப் பொருள் பேசியவா!"
"போகா வகைமெய்ப் பொருள்பே சியவா!"
"உரிதா உபதேசம் உணர்த்தியவா!"

என்று அநுபூதியில் முன் வந்த பாடல்களில் இந்த வியப்புணர்ச்சியைப் பார்த்தோம். அதே வகையில் இப்போது மற்றொன்றை வியக்கிறார்.

நான் என்ன தவம் செய்தேன! இந்தப் பேறு எனக்குக் கிடைத்ததே!' என்று ஆராமையுடன் அதிசயிக்கிறார். "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே!" திருஞான சம்பந்தர் கூறுகிறார். அருணகிரிநாதர்,

தானைப் பணியத் தவம் எய்தியவா!

என்று இங்கே வியப்பில் ஆழ்கிறார்.

---

கோள்மொழியும், பொய்யும் குறிக்கின்ற நாவினரைத்
தேள்போலும் எண்ணி, அகலல் தெளிவாமே.

'முருகனுடைய தாளைப் பணிவதற்குரிய தவத்தை முன்னைப் பிறவியிற் செய்து, அதன் பயனை இப்போது அடைந்தேனே, என்ன ஆச்சரியம்!' என்று வியக்கிறார்.

இறைவனுடைய தாளைப் பணிவது எளிய காரியம் என்று அந்த வழக்கம் உடையவர்களுக்குத் தோன்றலாம். உலகத்தில் உள்ள இருநூறுகோடி மக்களில் எத்தனைபேர் இறைவனைத் தொழுகிறார்கள் என்பதை ஆராய்ந்தால் அதன் அருமை தெரியும். அதைவிட அவ்வருமையை நன்கு உணர வேண்டுமானால், உலகிலுள்ள ஜீவராசிகளின் கணக்கைப் பார்த்து, அவற்றில் எத்தனை ஜீவன்கள் இறைவனைத் தொழுகின்றன என்று எண்ண வேண்டும்; மிகமிகக் குறைவாகவே தோன்றும். இதற்குக் காரணம் என்ன?

திருவள்ளுவர், உலகில் பலர் ஏழைகளாக இருக்க, சிலரே செல்வர்களாக இருக்கிறார்களே, இதற்கு ஒரு காரணம் சொல்கிறார். முற்பிறவியில் தவம் செய்தவர்கள் இப்போது செல்வத்தை அடைகிறார்கள்; தவம் செய்யாதவர்கள் அதனைப் பெறுவதில்லை. இப்போது ஏழைகள் மிகுதியாக இருப்பதற்குக் காரணம் தவம் செய்யாதவர்களின் கூட்டமே மிகுதி என்பது தான்.

"இலர்பலர் ஆகிய காரணம், நோற்பார்
சிலர்; பலர் நோலா தவர்"

என்பது குறள்.

பொருள் உடையாரைவிடப் பக்தி உடையவர்கள் இன்னும் சுருக்கமான அளவில் தான் இருக்கிறார்கள். ஆதலால் பக்தி வேண்டுமென்று தவம்புரிந்தவர்கள் சிலரினும் சிலராகவே இருக்க வேண்டும். அதனால்தான் பக்தன் ஒருவனைக் கண்டால் எல்லாரினும் சிறந்தவனாகப் பெரியர்கள் கொண்டாடுகிறார்கள்.

---

ஏற்பாரை ஏய்க்க நினையாமல், என்றுமவர்
வாய்ப்பாம் அறமெண்ணத், தெய்வத்தை வாழ்த்துவமே.

ஒருவனுக்குத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக வேண்டுமானல் எத்தனை தடைகளைத் தாண்டி வரவேண்டும் என்பதை மணிவாசகப் பெருமான் போற்றித் திருவகவலில் பாடுகிறர். "யானை முதலா எறும்பீ ருய, ஊனமில் யோனி யின் உள்வினை பிழைத்தும" என்று தொடங்கி, "புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்" என்பது வரையில் இருபது கண்டங்களைச் சொல்லி, அவற்றை யெல்லாம் கடந்து,

"தெய்வம் என்பதோர் சித்தம்உண் டாகி"

இறைவனைப பணியப புகவேண்டும் என்று சொல்கிறர்.

உலகம் முழுவதும் ஐம்புலனுகர்ச்சிக்கு ஏற்ற பொருள் களைக் கொண்டிருக்கிறது. அவற்றைக் கண முன்னலே பார்க்கிறேம். கண்ணுக்குத் தெரியும் பொருளிலே ஆசையும் நம்பிக்கையும் உண்டாவது இயலபு. இறைவனே புலன்களால் அறியப்படாதவன். அவன் இருப்பதை வாயினலே சொல்லக் கேட்கிறேம். ஆனல் அவனை நமக்கு நேரே கொண்டு வந்து யாராலும் காட்ட இயலாது. ஒரு சிறிய ஊரில் இருககிறவன் ஆப்பிள் பழத்தை உண்டதில்லை. ஆனல் அதைபபற்றிப படிததிருக்கிருன்; கேட்டிருக்கிருன். அவனுககு அதனிடம் நம்பிக்கை உண்டாகவில்லை மற்றப் பழங்களைப் போலத் தானே நேரில் உண்டு சுவைத்தால்தான் அவனுக்கு நம்பிக்கை எழும். அவனுக்கு வேண்டியவர்கள் ஆப்பிள்பழம் ஒன்று வாங்கிக் கொணடு வந்து கொடுத்துவிட்டால் அதை உண்டு அநுபவத் தில் அதைப்பற்றித் தெரிந்து கொள்வான். இது பெரிய காரியம் அனறு.

இறையநுபவம் அத்தகையதன்று. அது சுட்டுவதற்குரிய தன்று. புலனகளால நுகர முடியாதது. நுகாந்தவர்கள் இன்ன வாறு இருந்தது என்று சொல்ல முடியாதது. பிறருக்கு ஆபபிளைபபோல வாங்கிக கொண்டுவந்து கொடுக்க முடியாதது. அவனவனு முயனறு பெறவேண்டியது. உலகிலே எத்தனை அரும்பொருளாக இருந்தாலும் முயனறு பெற்றும் பிறருக்குக் கொடுத்து விடுவதுபோல இறைவன அருளைக் கொடுத்துவிட முடியாது.

---

உததமர் போதம் உடன்பட ரைக்,காலம்
நிச்சயமாத் திருததும் நிகழ்ச்சி களைக் கண்டாமே,

ஆகவே இறைவன் தாளைப் பணிவதென்பது மிகமிக அருமையான காரியம். முன்னைப் பிறவியில் தவம் செய்திருந்தால், இந்தப் பிறவியில் முருகன தாளைப் பணியும் செயல் நம்மிடம் உண்டாகும்.

"தவமும் தவமுடையார்க் காகும்"

எனபார் திருவள்ளுவர். இறைவனைப் பணிவது ஒரு தவம். அது கிடைககு முனபு ஒரு வகையில் தவம் செய்திருக்க வேண்டும். முதலில சிறு முதல் வைத்து வியாபாரம் செய்கிறவன், அதன பயனுகப் பொருள் சேர்த்துப் பெரிய முதலை வைத்துப் பின்னும் பெரிய வியாபாரம ஒனறை மேற் கொள்கிறுன். அதுபோல முற்பிறவியில் சிறிய அளவில் செய்த தவம் இப்பிறவியில் பக்தியாக விளைகிறது. சிறிய தவத்தால் இறைவனிடம் அருள்பெறறு அந்த அருளால் அவனை வணங்க வேண்டும்.

"அவனரு ளாலே அவன்றுள் வணங்கி"

எனறும்,

"யானேயோ தவஞ் செய்தேன்
சிவாய நம எனப் பெற்றேன்"

என்றும் வரும் திருவாசகப பகுதிகள இந்த உண்மையைத் தெளிவாககும்.

ஆதலின, இறைவனைப் பணிந்து வழிபடுவதற்கும் முன்னைத தவம் இருககவேண்டும். ஐம்பொறிகளையும் ஈர்ததுத் தம் வசத்தில ஈடுபடுததிக் கொளளும் பல வகைப் பொருள்களே மலிந்துள்ள உலகில, கண்ணுக்குத் தெரியாத ஒருவனிடம அனபு உண்டாவதற்கு எளிய வழி ஒனறும் இலலை. அவற்றில் ஈடுபடாத வலிமை, அலலது அவற்றில் ஈடுபடும் போதே இறைவனை வழிபடும் திறமை வருவதற்கு வேறு ஒரு பலம் இருக்க வேண்டும் அதுதான தபோபலம. அத்தகைய தவவலிமை எனபால இருககிறதே! முன்பு செய்த தவம் இப்போது பலிககிறதே! எனறு அதிசயிக்கிருர் அருணகிரியார்.

தாளைப் பணியத் தவம் எய்தியவா!

---

வேடிக்கைச சொற்களால் வேதனையும் நேர்வதுள
வாடிக்கை யாமதனை மாற்றுவது நல்வழியே.

விராலிமலை

## திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

நிராமய புராதன பராபர வராம்ருத
நிராகுல சிராதிகப் பிரபையாகி
நிராசசி வராஜத வராஜர்கள் பராவிய
நிராயுத புராரியச் சுதன்வேதா
சுராலய தராதல சராசர பிராணிகள்
சொரூபமிவ ராதியைக் குறியாமே
துராசைபுகழ் பராதின கராவுள பராமுக
துரோகரை தராசையுற் றடைவேனோ;
இராகவ இராமன்முன் இராவண இராவண
இராவண இராஜனுட் குடன்மாய்வென்
றிராகன்ம லராணிஜ புராணர்கு மராகலை
யிராஜசே லவாரணர்க் கிளையோனே!
விராகவ சுராதிப பொராதுத விராதடு
விராயண பராயணச் செருவூரா!
விராவிய குராவகில் பாரரைமு திராவனர்
விராலிம லைராஜதப் பெருமாளே!

(பதவுரை) (இராகவ.. .. ...குமரா !)

இராகவ இராமன் முன் - ரகுகுல திலகனான இராமன், (தன்) முன், இராவண இராவண - இரவின் பணபுடைய கருநிற உடலுள;

இராவண இராஜன் உடகுடன மாயவு என்று - இராவ ணேஸ்வரன அஞ்சி மரணம் அடைய அருள் என்று;

---

கலகம் தவிர்க்கும் கருத்தோ டணுகில்,
நலமுணரார், சீறி நாவந்த கூறுவரே.

இராகன மலர் ஆள் நிஜ புராணர் குமரா - அன்பணுகி (அர்ச்சித்த) மலர்களை ஏற்று அருளிய மெய்ம்மை நிறைவுள (விமலர்) மைந்தா !

(கலை... .....இளையோனே !)

கலை இராஜ சொல் அ வாரணர்க்கு இளையோனே - அருள் நூற்கள் மேன்மையுடன அறிவிக்கும், அநாதி நித்திய தந்தி முகர்க்குத் தம்பியே !

(விராகவ ....... செருலூரா !)

விராகவ - (எழுந்து பெருகும்) வேட்கை இல்லாதவனே சுரஅதிப - வானோர் தலைவா !

பொராது - போர் செய்யாமல்; தவிராது - (இலக்கும்) தவறாமல்; அடு வீர அயண பராயண செரு ஊரா - வெல் லும் வீர அறிவிபபை, (இடையறாது) விளம்பும் திருப்போரூர்த் தெய்வமே !

(அயணம் - அறிவிபபு; பாராயணம் என்பது, பராயணம் என மருவியது.)

(விராவிய... .....பெருமாளே !)

விராவிய குரா அகில் பராரை முதிரா வளர் - குரா மரங் களும் அகில் மரஙகளும் கலந்து, அடி பருத்து முதிர்ந்து வளர்நதுள,

விராலி மலை ராஜதப் பெருமாளே விராலி மலையில் வீற்றிருக்கும் உக்கிர மூர்த்தமாக உயர்நதவனே ! (விரவுதல் எங்கும் கலந்திருத்தல்.)

(நிராமய .... ...பிரபை ஆகி)

நிர் ஆமய - (பிறவி) நோய இலாததும்; புராதன - அநாதி நித்தியம் ஆனதும்; பராபர - மேம்பட்டதறகு எலலாம் மேம் பட்டதும்; வர அம்ருத - (அமுதம் போனற) வரங்களை அருள் வதும்; நிர் ஆகுல-எததுன்பமும் இல்லாததும்; சிராதிக பிரபை

ஏறும் இறங்கலுறும் இவ்வுலக வாழ்க்கையினைச்
சீறி வெறுத்தார், சிறந்த துறவினரே.

ஆகி - சிரத்தின் மேல் மிக்க பேரொளிப் பிழம்பாய்ப் பிரகாசிப்பதும் ;

(நிராச.........ஆதியைக் குறியாமே)

நிராச - ஆசை என்பது அணு அளவும் இல்லாத; சிவ ராஜ தவ ராஜர்கள் பராவிய - சிவராஜ யோகிகளான தவ சிரேட்டர்கள் வழிபடுகின்ற;

நிர் ஆயுத புர அரி - (ஒரு) ஆயுதமும் இலலாமல் (முப்) புரம் எரித்த முதலவரும்; சுர ஆலய - தேவலோகத்திலும், தராதல - நிலவுலகததிலும் (உள்ள);

சர அசர பிராணிகள் சொரூபம் இவர் - இயஙகுவனவும், (நிலைத்து) நிற்பனவுமான உயிர்களின சொருபததில் தோய்ந் துள்ள ;

ஆதியைக் குறியாமே - (உமது மூல) முதன்மையைத் தியானிக்காமல ;

(துரால் புகழ்.......அடைவேனோ ?) துரால் புகழ் உபயோகம் இலலாத புகழுடன் ; பராதின - அடிமை வாழ்வு ஆகி ; கரா உள பராமுக துரோகரை தராசை உற்று அடைவேனோ - (எங்கேயோ) பராக்குப பார்பபவர்போல் இருந்து, (திடுககெனறு பற்றும் திருட்டு) முதலை உள்ளம் கொண்ட துரோகிகளை, (அநியாய) உலக ஆசையால உறவாடுவனோ? (எ - று. அங்ஙனம் ஆகேன் எனபது இசையெசசம்.)

விரிவுரை

திடச சித்தம் உடையவன் தீர்க்க பாகு. மாபெரும் ரகு, அவன் மகன. ஒரு சமயம் ரகு, விஸ்வசித் எனும் வேளவியை நடத்தினன. நிறைநத பொருள் கரைநதது. வறியோர்க்கு அழகு வறுமையிற் செம்மை; அதை ரகு அனுசரிதது இருந் தான.

---

பலன்விளைகக வந்தநலோர், நீதி பகர்வர் ;
நலமில்விதி, யவ்வுரையை நஞசாக எணணும்மே

கருணை நிறைந்த அந்தணர் கவசர். அவர் ஒருநாள் ரகு விடம் வந்தார். அவர் திருவடிகளை வழிபட, மண் பாத்திரத்தில் நீர் கொணர்ந்தான் மன்னன். அது கண்டு, திடுக்கிட்ட கவசர் திரும்பினர்.

ஸ்வாமி! ஏன போகிறீர்? வந்த காரணம் தெரிந்தது இல்லையே என்று, வழி மறித்தான் ரகு

அரசே! குரு காணிக்கை செலுத்த கோடிபொன் வேண்டும். வள்ளலான உன்னிடம் அதை வாங்க வந்தேன். உன் நிலையை உணர்ந்தேன. வருந்தித் திரும்புகிறேன் என்றார் வந்தவர்.

ஸ்வாமி! வந்தவரை வறுங்கையராக அனுப்புவது என் வழக்கத்தில் இல்லை. இங்கேயே இரண்டொரு வாரம் இரும்; கோடிப பொன்னைக் கொடுத்தே அனுப்புவன்; என்மேல் ஆணை. இதற்குமுன் நீர் போவது கூடாது எனறு தடை செய்தான. அவர்கருப் பொன் அளிக்க மனனன, போர்க் கோலம் பூண்டான். புனித வடதிசை நோக்கிப் புறபபட்டான்.

தனககென வாழான; பிறர்க்கு என வாழும் ரகுவின் உளம் அறிந்த குபேரன, வளரும் செல்வத்தை, அவன் நெடும் கருவூலத்தில் நிரபபினன்.

அரச ஏவலர் அதை அறிந்தனர். ஓடிச சென்றனர். ரகுவைத் தடுதது நிறுத்தினர். உற்றது உரைத்தனர். மன்னன் ரகுவின் மனம் மகிழ்ந்தது. அரண்மனைக்குத் திரும்பினன். கொடுத்த வாக்கின்படி, கவசர்க்குக் கோடிக்குமேல் கொடுத்து அனுப்பினன்.

அந்த ரகுவின் மைந்தன், அஜன்; அஜன் மகன் தசரதன்; தசரத குமாரன இராமன். போதுமா வரலாறு.

பிறரைக் காக்க எண்ணும் ரகுவின் கால்வழியில், அந்த ரகுவிற்கு இணையானவன் ஆதலின், இராமன் இராகவன்

---

நற்செயல்கள் செய்யாமல் நாபபிறழ்ந்து பேசுநரை,
பற்பல் வகையாலும் நீங்கலுயர் பண்பாமே.

எனப்பெறுவன். இது, வடமொழியில், தத்திதாந்த நாமம் எனப் பெறும்.

அப்புனித புண்ணிய இராமனை எதிர்த்தவன், ஒருவன். அவன் கருத்த நிறத்தன். அரக்கர் தலைவன். பயங்கரமான அழுகுரல் ஒலியினன. அதனால் இராவணன் எனும் பெயர் எய்தியவன.

அஞ்சா நெஞ்சத் தீயன் அவன் அழிய வேண்டும், உலகம் அதனால் உய்யும் என்று எண்ணிய இராமன், அரிய மலர்களால் சிவபிரானை அர்ச்சிததான். பரம அவ் வழி பாட்டை ஏற்றுப் பேரருள் பாலிததவர், சத்தானவர்; நிறைந்து எங்கும் நிலைத்த நிமல இறைவர்; அப்பெருமான் அருளிய உம்மை.

'இராகவ இராமன......மலர் ஆள் நிஜபுராணர் குமரா!' என்று, கூவி எழுந்து கும்பிடுகின்றேம். (பூரணர் என்பது புராணர் என மருவியது.) கண்டதை எல்லாம் கலை என்று கூறி, மாபெரும் அதன் மதிபபை உலகம் மறந்துளது. ஓத அரியது, எவரும் உணர எளியது கலைச் செய்தி. ஊன்றி உணர்வார்க்கு, அககலையில், ஓத அரிய ஒரு மொழி உளது. அதை. 'கலை இராஜ சொல்' என்கின்றேம். "சொல்லாத வார்த்தையைச் சொன்னுண்டி தோழி" என்று பிறரும்,

"வார்த்தையுள படுத்துப் பற்றினாய்"

என்று திருவாசகமும் இதைத தெரிவிக்கினறதே.

நாள்தோறும், கணபதி வழிபாடு எங்கும் நடைபெறுகிறது. வழிபாட்டில ஒருமைமனம் வாயக்குமேல், அந்த ஒருமொழியைக் கணபதி உணர்ததுவதை உணரலாம். அவ்வளவு பரம உபகாரி யானவா ஆனைமுக அததர். அநாதி நிததியர் ஆதலின், அ வாரணர் எனறு அவரை அனுபவிக்கிறோம். அ-பண்டறிசுட்டு

---

* முதனமையுற எசசெயலும் முன்முடிப்பார் நட்பு இதமாம்; அவர்மொழியே இன்பம் விளைக்குமரோ.

எனப்பெறும். அத்துணைச் சிறந்த ஏரம்பர்க்கு இளையவர் நீர்; அதனால் தான், "கலை இராஜ சொல் அ வாரணர்க்கு இளையோனே!" என்று, ஆர்வத்தொடு உம்மை அழைக்கின்றோம்.

எப்பற்றும் இல்லாத நின்னை, 'விராகவ' என்கின்றோம்; (ராகம் - விருப்பு; வி - இன்மை.)

அமுதிற்குச் சுரை என்றொரு பெயருண்டு. அதை உண்பவர் சுரர். என்றும் இளமையும், மணம் கமழ் நிலையும், இமையா விழியும், ஒளி மிகு உடலும் உடைய அந்த அமரர் வழிபடும் உம்மை, 'சுராதிபா' என்னுமல், வேறு என்னென்று பெருமி! சொல்லுவது?

என்றுமே நீர் போர் புரிந்தது இல்லை; உம் சங்கற்ப இலக்கும் தவறியது இல்லை. அத்தகைய விரம் உமது அறிவிப்பு; பரம அக்குறிப்பை, என்றும் பாராயணம் செய்கிறது ஒருபதி. அதனால்தான் அத்தலம், என்றும் திருப்போரூர் என்று திகழ்கிறது. அதனில் அமைதியாக எழுந்தருளி யிருக்கும் உம்மை,

'பொராது - தவிராது - அடு வீர அயண பராயண செருவூரா' என்று, போற்றி எம் மனம் புளகிக்கின்றது. (வீர அயநம் - சந்த இன்பம் கருதி, 'விராயணம்' என்று ஆயது; அதுபோல, பாராயணம் எனபது, 'பராயணம்' ஆயது. அயநம் - அறிவிப்பு.)

குரு மூர்த்தம் ஆனபொழுது, குராமலா சூடுவீர்! போக மூர்த்தம் ஆம்பொழுது, அகில் மண மேனியர்ஆகின்றீர். அந்த அருமை அறிந்து, எஙகும் குரா மரங்களும், அகில் மரங்களும், அடிபருத்து வானோங்கி வளர்ந்த தலம் விராலிமலை.

வயலூரில் உம்மை வழிபட்டு இருந்தேம்; எளிய எம் முன் எழுந்தருளி, விராலி மலைக்கு வா என்றீர்; வரத குமரா! நீர் அறிவித்தபடியே வந்துளன், "அறிவித்தால் அன்றி அறியா உனங்கள்" என்று, சாத்திரம் கூறும் அரு

---

வெனனீரில, வேண்டளவு தண்ணீர் விளவலபோல,
தன்னளவில் கோபம் தணிந்திருத்தல் தக்கதுவே.

மையை, இவ்வரலாற்றின் மூலம், உலகம் இனி உணரும் அல்லவா !

இராஜதம் என்பது, முக்குணங்களுள் ஒன்று ; மற்றவை தாமசம், சாத்விகம் என்பவை ; உம்மிடம் உள்ள அவைகளின் அருமையே தனி. இனிய அக்குணம் உம்மில் இல்லையேல், சொருபமே யனறி, உம்மை உருவத் திருமேனியில் உணர இயலுமோ ? ஊக்கம், அறிவு, வீரம், தருமம், தானம், கல்வி, கேள்வி, தவம் எனும் எட்டும் உடையது இராஜதம். அந்த எட்டும் உமது உடைமை. அதனால்தான, 'இராஜதப் பெருமாளே' எனறு, உணர்ந்து போற்றுகிறது உலகம்.

அதனுடன், "நாலங்க வேதத்தின் பொருளோன் - நான் என்று மார்தட்டும் பெருமாள்" என்று, வீரிட்டுக் கூவி உம்மை விளிக்கலாம் அல்லவா !

காரணம் பற்றிய நோய் ஒன்று ; காம வழி வந்த பிணி ஒன்று ; காரணத்திற்கு மருநதுண்டு ; கர்மத்திற்கு மருந்தில்லை. இந்த இரண்டையும் அனுபவிபபவர் நாங்கள். அருளே திரு மேனியான உமக்கு, அந்த இரு நோயும் இல்லை. அதனால் 'நிராமயன்' ஆயினை. (ஆமயம் - நோய் ; நிர் இல்லை.)

பழையரிற் பழையன் ; பழம்பொருள் யாவற்றினும் கடந்த பழம்பொருள் நீர். அதனால், 'புராதனன' எனறு உம்மைப் புகல்கிறோம்.

பரம் என்பது சிவஞானம் ; அபரம் என்பது கலை ஞானம் ; இந்த இரு ஞானமும் உமது சொரூபம். அதனால்தான், பர + அபுரா = பராபரா என்று பகர்கின்றார் மேலோர். மேலானவரில் மேலோன் என்றும் இதற்குப் பொருளுண்டு.

இனப வரம் தரும் உம்மை, வர + அம்ருதா = வராம்ருதா என்று வாய் மலர்கினறோம்.

---

தங்குறையோ தீர்ந்ததிலை யாஞலும், மற்றவர்கள்
தங்குறையைத் தீர்க்கத், தாவுவார் தக்கோரே.

எழுந்தால் கவலை. வாய் திறந்தால் வம்பு. உறவில் துன்பம். நட்பில் நட்டம். எப்புறம் திரும்பினுலும் ஏகமான தொல்லை. இது எங்கள் தலைவிதி. எத்துன்பமும் இல்லா உம்மை, 'நிர்+ஆகுல=நிராகுலா என்கிறபோதே, மாபெரும் எம் வேதனை யாவும் மறைந்திடுகின்றதே!

எண் சாண் உடலில, சிரம் பிரதானம். அதன் உச்சியில் இருந்து, பன்னிரண்டு அங்குலத்திற்கு மேல் துவாதசாந்த நிலம் உளது. அங்குப பேரொளிப் பிழம்பாய்ப் பிரகாசிக்கும் உம்மை, சிர+அதிக=சிராதிகப் பிரபை யாயுளீர் என்று உணர்கிறேம். (பிரபை - ஒளிமயம்.)

பற்று நீங்க, மேலோர் பலவகையில் முயன்றனர். அதன் பின், 60 நாழிகை பாராயணம் செய்தனா; அதன்பின், அறுபது நாழிகை ஆறெழுததை உருவேற்றினர். அதன்பின் அயர்ச்சி. அயர்ச்சியில மௌனம். நாள்தோறும் இந்த நடை. இதன்வழி, ஓடி மீளும் சுவாசம், தானே ஒடுங்கும். இதுதான் சிவராஜ யோகம். இசசாதகரே சிவராஜ யோக தவராஜர் எனப்பெறுவர்.

" துருத்தி எனும்படிக் கும்பித்து வாயுவை, சுற்றிமுறித்து
அருததி உடம்பை ஒறுக்கில் என்னும் ? சிவயோகம் எனும்
குருத்தை அறிந்து, முகம் ஆறுடைக குருநாதன சொனன
கருத்தை மனத்தில் இருத்தும் கண்டீர்; முத்தி கைகண்டதே

என்று, அலங்காரமாக ஓர் இடத்தில், இதை உலகர்க்கு அறிவித்தும் இருக்கிறேன்.

பொராது, தவிராது, அடு விராயணர் ஆன உம்மை ஆராதிதத பயனுக, எப்படையும் ஏந்தாமல், சிரித்துப் புரத்தை எரிததவர் சீகணடர்;

---

வாதநோய் ஆட்டை வதைக்க, அதன்நாற்றம்
வாதத்தை மற்றவர்க்குத் தீர்க்குமெனும் வாகடமே.

மேல் சொன்ன நிராச சிவராஜ தவராஜர்கள் அந்த சீகண்டரையே தியானிக்கின்றனர். அதனால்தான்

நிராச சிவராஜ தவராஜர்கள் பராவிய நிராயுத புராரி என்கின்றோம்.

கைகுவித்தவரைக் கைவிடாத திருமால், அச்யுதர் என்று அறியப பெறுகிறார். (அச்யுதர் - கைவிடாதவர்.) ஓயாது வேதம் ஓதும் பிரமதேவர், 'வேதா' என்று விளங்கு கிறார். ஸ்ரீகண்டர், திருமால், பிரமதேவர் எனும் மூர்த்திகள் மூவரில் கலந்து இருந்து, நலமாக அவர்கள் தொழிலை நடத்து கின்றீர். அது கருதியே,

புராரி அச்சுதன் வேதா......சொரூபா' என்று புகல் கின்றோம் யாம். அவ்வளவுதானா !

சுரு ஆலயம் எனும் பொன்னுலகம், தராதலம் எனும் மண்ணுலகம், இவைகளில் உள்ள இயங்குவன, நிலைத்து நிற்பனவான உயிர்கள, எனறும் உயிர்ததுக் கொண்டே இருக்கினறன. பிராண ஓட்டம் உடைய அவைகளை, பிராணி கள என்றே பேசுகிறோம்: திரிமூர்த்திகளின் உயிர்ப்பிற்கும், பிறர் உயிாப்பிறகும் மூலமாக, அவர்களில், அவைகளில் இருந்து உயிர்ப்பவர் நீர். இதனால் தான உம்மை,

பிராணிகள் சொரூபம் இவர் ஆதி' என்று மறைகள் பேசுகினறன.

நிராமய, புராதன, பராபர, வராம்ருத, நிராகுல, சிராதிகப் பிரபையாகிய புராரி, அச்சுதன, வேதா, சுராலய, தராதல, சராசரப் பிராணிகளில் உம் சொருப ஆட்சியுளது. அச்சொருப வித்தில் இருந்து விளைந்தது உம் தடதத் திருவுரு. அதனால்

---

செல்வரிடம் நட்புடையார், தம்வறுமை செப்பார்கள்
சொல்லத் துவக்கினவர் சொல்நட்பு சோர்வுறுமே.

தான், 'சொருபம் இவர் ஆதி' என்று சொல்கின்றேம். (இவர்தல் - மேலிருந்து எழுந்து விளங்குதல்.) அநாதி சொருபம், ஆதி - திருவுருவம். சொருபம், அறிவால் அறிய இயலாதது. எச்சாதனைக்கும், ஆரம்பத்தில் வேண்டப்பெறுவது திருவுருவே: ஆ! உமது திருவுருவாம் 'குறியைக் குறியாது குறித்தறியும்'' நெறியைக் கொண்டு உயர்ந்தனர் மேலோர்.

படித்தவன், அறிவாளி, பேசசாளன், எழுத்தாளன், தர்மிஷ்டன் என்று பிறர் புகழ்தலை உவகையொடு வரவேற்பது உலக வழகக்கு. ஐயோ! அப்புகழ்கள், குப்பையில் கொண்டு போய்க் கொட்டுதற்கே உரியன. அது 'துரால் புகழ்.' (துரால்- குப்பை கூளம்.) அதுதானு!

முதலையின் சாதுத்தனம் மோசமானது. அம்முதலை போன்ற மனமுடையோர் அளவிலர். காரியம் தீர்ந்தபின் கால் தட்டும் துரோகிகளும், அரிய இவ்வுலகில் அதிகரித்துளர். யாதாயினும் ஆக; வளர வேண்டும்; உலகில் வாழவேண்டும் என்னும் இச்சையால், அவர்களொடு உறவு வேண்டேன்; புனித உம்மையே புகலடைவேன என்று, விம்மிப பொருமி விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்.

---

மதிப்பும் அவமதிப்பும் எண்ணுமல், மன்னறமே
உதிக்கின்ற நற்செயலைச் செய்பவர்கள் உத்தமரே.

## கண் இழந்து மீளப் பெறுதல்

(கி. வா. ஜகந்நாதன்)

திருவொற்றியூரை அடைந்த சுநதரர் திருக்கோயில் சென்று எழுத்தறியும் பெருமானை வணங்கிப் பதிகம் பாடினார். அந்தத் தலததில் தங்கி அவ்வப்போது இறைவனைத் தரிசித்து இன்புற்று வந்தார்.

திருவொற்றியூருக்கு அருகில் ஞாயிறு என்ற ஊரில் ஒரு வேளாண் செல்வர் இருந்தார். அவரை யாவரும் ஞாயிறு கிழார் என்று அழைப்பர். திருக்கயிலையில் உமாதேவியாருக்குத் தொண்டு புரியும் மஙகையர் இருவரில் ஒருவர் திருவாரூரில பரவையாராகப் பிறநது சுந்தரரை மணநதார் என்பதை முனபு கணடோம். மற்றொருவராகிய அநிநதிதையார் ஞாயிறு கிழாரின் புதல்வி யாகத் தோனறி வளர்நது வந்தார். அழகும் பண்பும் தெய்வப் பொலிவும் பெற்று விளங்கிய அவர் மணப் பருவத்தை அடைந்தார். அதுகண்டு தாய் தந்தையர், "இவளுக்கு ஏற்ற கணவனைத தேடவேணடும்" என்று பேசிக் கொண்டனர். அதை அறிந்த புதல்வியாகிய சஙகிலியார், "சிவபெருமானுடைய அருளபெற்ற ஒருவரை யன்றி வேறு யாரையும் நான மணம் புரிந்து கொள்ளேன்' என்று சொல்லி விட்டார். அது முதல் தாய்தந்தையர் தாமாக எந்த முயற்சியும் செய்வதை விட்டு விட்டார்கள். இந்தச செய்தி வேறு யாருக்குந் தெரியாது.

யாரோ ஒருவன், சில உறவினரை மகள் பேசும்படி ஞாயிறு கிழாரிடம் அனுப்பினான். வந்தவர்களிடம் அவர் பக்குவமாகச் சொல்லிஅவர்களுக்கு இணங்காமையைக்குறிப்பால்தெரிவிதது

---

விளக்கை எலிசாய்த்து வீடுபற்றிக் கொள்வதுபோல்
களக்கர் உறவால், கலகலக்கும் நட்புறவே.

அனுப்பி விட்டார். மணம் பேச வந்தவர்கள் திரும்பிப்போன போது, அவர்களை விடுத்தவன் இறந்தான். "இந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள நினைத்தவருக்குத் தீங்கு நேரும் எனற எண்ணம், இந்த நிகழ்ச்சியால் யாவருக்கும் உண்டாகி விட்டது. சங்கிலியார், "நான ஒற்றியூர் இறைவன் திருத் தொண்டு புரிந்து காலம் கழிப்பேன' என்றார்.

தாய்தந்தையர் சங்கிலியாரின் விருப்பப்படியே திரு வொற்றியூரில் ஒரு கன்னிமாடம் கட்டுவித்து, அங்கே அவரை உறையுமபடிச் செய்தனர். வேணடிய வசதிகளை யெல்லாம் அமைத்து, அவருடன் சில தோழியரையும் இருக்கச செய்தனர். சங்கிலியார் திருவொற்றியூர்க் கோயிலில் மலர் தொடுக்கும் மண்டபத்தில் திரையிட்டுக் கொண்டு, மாலை தொடுத்து எம் பெருமானுககு வழங்கி வநதார். பஞ்சாட்சர ஜபம் செய்து கொண்டே மாலை தொடுத்து வந்தார்.

ஒரு நாள் சங்கிலியார் மாலை தொடுத்து அதனை இறை வனுக்கு அணியும்படிக் கொடுப்பதற்குத் திரையை விலக்கி வெளியே வந்தார். அப்போது அங்கே வநத வனறொண்டர் சங்கிலியாரைக கண்டார். முன்பு இறைவன் பணித்த விதி யினால், சுநதர மூர்த்தியின உள்ளம் அநத மஙகையர்பால் சென்று பதிந்தது. அம்மாது நல்லார், தம் திருப்பணியை நிறைவேற்றிக் கன்னிமாடம் புகுந்தார்.

சங்கிலியார் இன்னார் என்பதை விசாரித்து அறிந்த சுந்தரருக்கு, அவர் மேல் காதல் முதிர்ந்தது. திருவொற்றியூர்ப் பெருமான முன் சென்று வணங்கி, "எம்பெருமானே, ஒருபால் உமாதேவியாரை வைத்து மகிழ்கின்றது போதாமல், மணி *முடியின்மேல் கங்கையை மறைத்து வைத்திருக்கும் நாதரே*, தேவரீருக்கும் மாலைகட்டி, என உள்ளத் திண்மையைக் கட்டுக்

---

புகைக்கும் மனக்கவலை பொங்கிவரும் சூழ்நிலையை,
நகைத்து மறத்தல்; நலமென்பர் நல்லோரே.

சூலேத்த சங்கிலியை எனக்கு அருளி என் துன்பத்தைப் போக்கி யருள வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.'

இறைவன் அவருக்கு அவ்வாறே செய்வதாக அருளினன் பிறகு சங்கிலியார் கனவிலே தோன்றி, ''தவம் மிக்க சங்கிலியே, என்னிடம் மிக்க அன்புடையவனும், மேருவைப் போன்ற தவமுடையவனும், வெண்ணெய் நல்லூரில் நம்மால் ஆட்கொள்ளப்பட்டவனும் ஆகிய நாவலாரூரன் உன்னை அளிக்க வேண்டும் என்று நம்மை இரந்தான். நீ அவனை மணந்து கொள்வாயாக'' என்று வாய் மலர்ந்தான். சங்கிலியார் இறைவனைத் தொழுது, ''எம்பிரானே, தேவரீர் அருளிச் செய்த அவருக்கு உரியவளாக ஆவேன். ஆனால் ஒரு செய்தியை அடியேன் விண்ணப்பம் செய்து கொள்ள விரும்பு கிறேன். அந்தத் தொண்டர் தலைவர் திருவாரூரிலே மகிழ்ந்து தங்குபவர் என்பதைத் தேவரீர் அறிவீர்களே!'' என்று நாணத் துடன் கூறினர். இறைவன், ''உன்னை விட்டு நீங்கமாட்டேன் என்ற சபதத்தை அவன் செய்யும்படிச் செய்கிறேன்'' என்று கூறி மறைந்தான்.

சுந்தரர்பால் சென்று, ''உன்னை மணம்புரிந்து கொள்ளும் படி சங்கிலியிடம் சொன்னேம். அவள் உன்னால் ஒரு காரியம் ஆகவேண்டும் என்றுசொன்னள்'' என்று இறைவன் கூறினன். ''நான் செய்ய வேண்டியது யாது?'' என்று சுந்தரர் கேட்க, ''இன்று இரவே அவள் முன்பு உன்னைவிட்டு நீங்கமாட்டேன் என்று ஒரு சபதம் செய்து தரவேண்டும்'' என்று இறைவன் திருவாய் மலர்ந்தான்.

அதுகேட்ட சுந்தரர் சற்றே மயங்கினர். 'எம்பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களுக் கெல்லாம் செல்ல வேண்டும் என்ற என் விருப்பத்துக்கு இது ஒருதடையாக

---

இருப்பை இழந்தபின, ஏங்குவதால யாதுபயன்?
அருந்துகின்ற முனவினையின, ஆரயபரிப்பு அஃதாமே.

இருக்கும்போல் இருக்கிறதே !' என்று எண்ணிக் கவன்றவர், பின்பு இதற்கு ஒரு தந்திரம் செய்யலாம் என்று துணிந்தார். இறைவனை நோக்கி, "எம்பெருமானே, தேவரீருடைய சந்நிதியில் அவளுடன் வந்து சபதம் செய்கிறேன். ஆனால் அந்தச் சமயததில் தேவரீர் கோயிலிலுள்ள மகிழ மரத்துக்குச் சென்று எழுந்தருளி யிருக்க வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார். இறைவன் அவ்வாறே செய்வதாக ஒப்புக் கொண்டார்.

ஆனால் மீண்டும் அப்பெருமான் சங்கிலியாரிடம் சென்று, "நாவலாரூரன் நம்முடைய சந்நிதியில் சபதம் செய்து தருகிறேன் என்பான். நீ அதற்கு இசையாமல் மகிழமரத்தின் அடியில் செய்து தரச் சொல" என்று அருளி மறைந்தான். சங்கிலியார் தாம் கனவிலே கண்டவற்றை யெலலாம் தோழியிடம் சொல்ல, அவர்கள் வியபபும் மகிழ்சசியும் கொண்டார்கள்.

புலரும் பொழுதாயினமையின் சங்கிலியார் திருக்கோயிலுக்குத தோழிமாருடன செல்ல, சுந்தரரும் அப்போது அங்கே வந்து சேர்ந்தார். அவர் சங்கிலியாரை அணுகி இறைவன் அருளியதைச சொலல, நாணத்துடன் நின்ற அம்மஙகை நல்லார் கோயிலுளளேபுக, அவருடன் சுந்தரரும் உட்புகுநதார். "நான உன்னைப பிரியமாட்டேன என்ற உறுதி மொழியை இறைவன் திருமுன மொழிய எண்ணுகிறேன , அஙகே வருக" என்று சுநதரர் கூற, சங்கிலியாருடைய கனவைக் கேட்டிருந்த தோழிமார், "இதன் பொருட்டு இறைவன் முன் போய்ச சபதம் செய்வது தகாது ; மகிழமரத்தின் கீழே இருந்து செய்தால் போதும்" என்று சொனனார்கள். சுந்தரர், 'நாம் மறுத்தால் நமக்குப் பழியாகும்' எனறு எண்ணி அவ்வாறே செயவதாக இசைநதார்.

யாவரும் மகிழ மரத்தை அடைந்தார்கள். தம்பிரான் தோழர் அந்த மரத்தை மூனறு முறை வலம் வந்து, "உன்னை நான் பிரியேன்" எனறு சபதம் செய்து கொடுத்தார். சங்கிலி

---

வெண்ணெயால கண்மறைத்துக கொக்கை வளைப்பமென எண்ணுநர்போல், பேசுநர் ஏமாந்து போவாரே.

யார் தம் தொண்டிலே ஈடுபட்டார். சுந்தரர் இறைவன் முன் சென்று அவனுடைய திருவருளை எண்ணி வாழ்த்தினார்.

அன்று இரவே இறைவன் சிவனடியார்களுடைய கனவில் தோன்றி, "நம்பியாரூரனுக்கு நங்கை சங்கிலியை நமமுடைய ஏவலினால் மணம்புரிவிப்பீர்களாக!" என்று கட்டளை யிட்டான். அவர்கள் விடிந்து எழுந்து ஒருவருக்கு ஒருவர் தாம் கண்ட கனவைச் சொல்லிக் கொண்டு சுந்தரரை அணுகிப பணிந்து இறைவன் இட்ட கட்டளையைச் சொன்னார்கள். பின்பு அவர்கள் சுந்தரமூர்த்தியாருக்கும் சங்கிலியாருககும் சிறப்பாகத் திருமணததை நிறைவேற்றினார்கள். அவ்விருவரும் இறைவன திருவருளில் மனம் ஒனறி இணைந்து வாழ்ந்து வந்தார்கள்.

சிலகாலம் செல்ல, வசந்தமென்னும் இளவேனிற் பருவம் வந்தது அக்காலத்தில் மிகச சிறபபாகத் திருவாரூரில் திரு விழா நடைபெறும். வீதிவிடங்கப பெருமானுடைய திருவோலக்கத்தில் பரவையார் ஆடலும் பாடலும் நடைபெறும். இவை இப்போது சுந்தரமூாத்தியாருக்கு நினைவில் வந்து தோன்றின. "திருவாரூாப் பெருமானை மறநது இஙகேஇருநது விட்டேனே!" எனற வருத்தம் உண்டாயிற்று. திருவாரூர் செனறு எம்பெருமானைத தரிசிக்க வேண்டும் எனற ஆர்வம் நாளுக்கு நாள முதிர்ந்து வந்தது. ஒருநாள் திருவொற்றியூர்த திருக்கோயிலுக்குச சென்று வணங்கி எழுந்து திருவாரூருக்குப் புறப பட்டு விட்டார்.

சபதத்தை முறித்து விட்டதனால் திருவொற்றியூர் எல்லையைக் கடந்தவுடனே அவருடைய கண்கள் இரண்டும் குருடாகி விட்டன. 'சங்கிலியைப பிரிந்து செல்மொட்டேன் என்று சபதம் செய்து விட்டு இபபோது பிரிந்து வருவதனால் இநதத் துன்பம் வந்தது. இது நீங்கும் பொருட்டு ஒற்றியூர்ப் பெருமானைப பாடுவேன்' எனறு எண்ணி மனம் உருகிக் கண் தரவேண்டும் என்று ஒரு பதிகம் பாடினார். பாடியும் கண் தெரியவில்லை. திருவாரூரை நோக்கிச சென்ற அவர், வழியிலே செல்பவர்கள் வழிகாட்ட மெல்ல மெலலப் போனார். திருமுல்லை வாயில் செனறு இறைவனை வழிபடடுப் பதிகம்பாடி

---

பருவம் தவறிமழை பெய்தாலும், வெள்ளம்
பெருகலெனச், செல்வம் பிறங்கும்பின் னுளினுமே.

னூர். பின்பு வெண்பாக்கம் என்ற தலத்தை அடைந்தார். அங்கே இறைவனை வருந்திப் பாட, அவன் ஊன்றுகோல் ஒன்று அருளி, அயலாரைப்போல, "உளோம்போகீர்" என்று அருளி அனுப்பி விட்டான்.

சத்தியம் பிறழ்ந்தவர்கள் எவ்வளவு சிறந்தவர்களானாலும் துன்புறுவார்கள் என்ற உண்மையை இறைவன் சுந்தரமூர்த்தி யார் வாயிலாக உலகுக்கு அறிவிக்க எண்ணினான்போலும்! வெண்பாக்கத்திலும் தம் விண்ணப்பம் பலிக்காமல் போனதை அறிந்து வருந்தி மேலும் தம் யாத்திரையைத் தொடர்ந்தார் வன்றொண்டர். திருவாலங் காட்டையும் திருவூறலையும் பணிந்து காஞ்சீபுரம் சென்றடைந்தார். அங்கே ஏகம்பநாதனை வணங்கி உருகி நிற்கும்போது, அவருக்கு இடக்கண்பார்வை தெரிந்தது. நன்றியறிவுடன் ஏகம்பனைப் பாடி அங்கே சில காலம் தங்கினார். அங்கிருந்து புறப்பட்டுப் பலதலங்களை அடைந்து பணிந்து, சோழநாட்டிலுள்ள திருத்துருத்தியை வழிபட்டார். அங்கே அவர் மேனிமேல் இருந்த பிணி நீங்கியது. ஒற்றைக் கண்ணுடன் திருவாரூரை நோக்கிச் சென்றார். திருவாரூர் அணுகியது. நெடுந்தூரத்தில் அதைக்கண்டவுடன் கீழே விழுந்து பணிந்து எழுந்தார். அதன் முழு அழகையும் ஒற்றைக் கண்ணால் காணமுடியாமல் தவித்தார். திருவாரூருக்குள்ளே புகுந்து பரவையுண்மண்டலி என்னும் திருக்கோயிலைப் பணிந்து, வன்மீகநாதர் கோயிலை அடைந்து, புற்றிடங் கொண்ட புராதனரை ஆராத காதல் மீதூரப் பணிந்தார். வலக்கண் பார்வையையும் தரவேண்டுமென்று கரைந்து புலம்பிப் பாடினார்.

கருணாநிதியாகிய இறைவன் அவருடைய வேதனைக்கு இறங்கி மற்றைக் கண்ணையும் கொடுத்தருளினான். இரு கண் பார்வையும் தெளிவாகப் பெற்ற நம்பியாரூரர் பரவசமாக நின்றார்; விழுந்தார்; எழுந்தார். பாடினார். பின்பு கோயிலை வலமாக வந்தார்; அடியார்கள் கூடியிருக்கும் தேவாசிரிய மண்டபத்துக்கு அருகில் வந்து சேர்ந்தார்.

---

வலியார் பகைவினையின் ஆபத்தாம்; வாளா
மெலியார் பகையேல், மேலேறும் சாபமரோ.

# எவர்மேலும் பிழையில்லை

[ ரஸபதி ]

எங்கும் பசுமை. எங்கும் குளுமை, எங்கும் மலர் மணம். அமைதியான இடம், அந்த அற்புதமலை. ஆம். அதன் பெயர் அதுதான்.

அம் மலையில் வாழ்கிறான் ஆருகன். அவன் மறவர் குலத்தவன். இரக்கம் மிக்கவன். புனித முன்னைய புண்ணியத்தால், சீர்மிகு சிவையைச் சிந்திப்பான். வாழும் அடியர்களை வந்திப்பான்.

முதல் மனைவியை இழந்தான். அடுத்து மணந்த அவன் துணைவி, அவன் மனம்போல் அமைந்த மங்கை. கற்பின் பொற்பில், அவளுக்கு இணை அவளேதான். கணவனைப் பெயராலும் பிரிய மனமின்றி, தன் பெயரையும் ஆருகி என்றே அறிவிப்பாள். மறவர்கள் குலத்தில், இவர்கள் மாணிக்கமான தம்பதிகள்; வாழ்க்கையில், அளவிலாத் துன்பங்களை அனுபவித்தவர்கள்; வேண்டவே வேண்டா பிறப்பு என்று வெறுத்தவர்கள்.

அற்புத மலையின் அண்மையில், தேவிக்கு ஒரு திருக்கோயில். அது எவர் அமைத்ததோ, எந்தக் காலத்ததோ, வாழும் தொன்மை வாய்ந்தது என்ற அளவில்தான், அதை எவரும் அறிந்துளர்.

என்றும் ஆருகன், காலையில் எழுவான். மறவர் குலத்து மரபைச் செய்வான். அதன்பின் நீராடுவான். நீறு பூசுவான். அம்பிகை கோயிலுக்கு, அன்பொடு செல்வான்.

ஆருகி தொடர்வாள். அவட்குக் கோயிலின் புறத்தில் இருந்து கும்பிட உரிமை. அது ஆருகனது அறிவிப்பு. அதைப்

---

வேண்டாத எப்பொருளும், மென்மேலும் சேர்கிற்கும்;
வேண்டும் எதுவும், மறைவிப்பி தெனனேயோ?

யின்பற்றி ஆகுகி, வாயிலில் நின்று, கோமளேஸ்வரியைக் கும்பிடுவாள்.

புனித மூல ஸ்தானத்தில், ஆகுகன் புகுவான். அறிந்த அளவில், அமலையை ஆராதிப்பான.

தேவ தேவி ! திரிபுர தகனி ! நில உலகை அளித்தது நியாயம் ஆகலாம். எனனைத் தந்தது ஏன் அம்மா ? என்றால் பயன் எனக்கே இல்லையே ; தோன்றிய போதே கருவுள் துன்பம். பிறக்கும் போது, உடலம் நொறுங்கிப் பெருகிய துயரம். வளர்ச்சியில் எத்துணையோ வருத்தும் சூழ்நிலை. நோயில் நொடிதல். துயிலில் அமைதி. விழித்த பின, காலை உபாதியில் கலகலப்பு. பகல் உபாதியில் படபடபபு. மாலை உபாதி மயங்கும் மனநிலை. குப்பை வாழ்க்கையில் குதூகலம் வேறு. ஐயோ அம்பா ! எத்தனை தொல்லை ! வேணடாம் தாயே ! உடலில் உள்ள என்னை எடு ! உனது அடிமலர் நிழலில் இடு தாயே ! எனறு, கண்ணீர் பெருக்கிக் கதறுவான்.

மாலை மாலையாகக கணணீா ஒழுக, ஆகுகன் நிலையில், அம்பிகை வாயிலில் ஆகுகி அலறுவள். அதன்பின இல்லம் திரும்புவர். மாலையிலும், பிராட்டி திருமுன் இதே பிரார்த்தனை.

ஒரு நாள். மாலை வழிபாடு நடந்தது. அதே நேரத்தில், நெடுஞ்சடை ஊசலாட, வழியே ஒரு தபோதனர் வநதார். நிமலை கோயிலைக் கண்டு நின்றார்.

அவர் வருகை கண்ட ஆகுகி, வளர்ந்த அன்பால் வணங்கினள்.

ஸ்வாமி ! நேரத்து இருள் நெருங்குகிறது. இனி நீர் எங்கும் போவது கூடாது. மறைந்திருக்கும் விலங்குகள், வெளிப்பட்டு உலவும் நேரம் இது. எஙகளோடு இங்கே தங்கியிரும் எனறு, விநயம் காட்டி விணணபபித்தனள்.

---

நல்கடமை செய்ஒருவன, நற்புகழைத் தான்பெறுவன்;
புல்குகின்ற விண்ணின்பப் புண்ணியமும் கைவருமே.

பெண்களோடு பேசுவது பிழை. அம்மரபை அந்த அருந் தவர் அறிந்தவர். குறிப்பாகக் கூட எதையும் கூறிலர். ஞான முனிவர் மோனர் ஆயினர்.

ஆலயத்துள் இருந்து, ஆகுகன் வெளி வந்தான். கடுந்தவ சீலரைக கண்டான். மகிழ்ந்தது மனம். ஓடி வந்தான். அடியில் விழுந்தான். எழுந்தும் தொழுதான்.

என்ன புண்ணியம் செய்தேனோ! தோன்றாத் தேவியைத் தொழுத பயனாக, தோன்றும் அடியவரைத் தொழுகிறேன! என்று அவன மனம் எண்ணியது.

ஸ்வாமி! என்ன பணி செய்ய வேண்டும் இந்த ஏழை?

அப்பா! யான் யாததிரை வாசி. இரவு விடியும்வரை, படுக்க இடமளித்தால் போதும்.

அப்படியே செய்யலாம். வாரும் என்று, ஆர்வ விநயம் காட்டி அழைத்துச் சென்றான். இரவு மணி ஏழு. எதிரில் குடிசை. புனித மூவரும், அதனுள புகுந்தனர். காயும் கனியும், கிழங்கு வகைகளும், தேனும் மாவும், அனபொடு தம்பதிகள் அளித்தனர்.

ஸ்வாமி! இங்கு நீர் படுத்து இரும். ஆகுகீ! நீ வா. இருவரும் புறத்தில் இருக்கலாம் என்றான ஆகுகன்.

இரவு நேரத்தில், பெண பிள்ளையை வெளியே விடுதல் பிழை என்ற முனிவர், அப்போதே தியானத்தில அமர்ந்தார்.

ஆமாம் ஆகுகி. இது சிறு குடில். பழகிய இடததில் நீ படுத்துக்கொள்! இடம் மாறினால் நித்திரை வராது. வந்த வரைக் காக்க, இரவு முழுதும் கண்விழித்து, குடிலைச சுற்றி நான் காவல் செயகிறேன எனறான் ஆகுகன.

மறுக்க ஆகுகிக்கு மனமில்லை. கற்பெனப் படுவது சொல திறம்பாமை. அரிய இச்சாதனையை அனுசரித்த அவள், படுக்கை விரித்து ஒருபுறமாகப படுத்தாள்.

---

பட்டதெலாம் பட்டுப, பயனுன பற்று
விட்டதே, பேரின்ப வீடெனபர் விததகரே.

அரிய யோக நித்திரையில் முனிவர் ஆழ்ந்தார். ஆகுகி கொண்டது அயுர்சசித் தூக்கம்.

வில்லும் அம்பும் ஏந்திய ஆகுகன, குடிலுக்கு வெளியே, இமையா விழியோடு இருந்தான்.

பயஙகரமான கடும் இரவு, பாதி கழிந்தது. ஆகுகன உடலில் அயர்ச்சி பிறந்தது. சமாளித்தான். முடியவில்லை. வீர நெஞ்சினன ஆதலின, பயம் சிறிதும் இன்றிப் படுத்தான். சிறிது நேரத்தில கண்ணயர்ந்தான்.

கொள்ளி நெருப்புப் போனற இரு குரூரமான கண்கள் கண்ணுறங்குவானைக் கண்டன. ஐயோ! புலியா என்ன. ஆம். பின்போய் முனனேறி, பலத்த நரம்பை முறுக்கேற்றிக் கொண்ட பாழும் புலி, அவன மேல் பாய்ந்தது. ஓங்கி அறைந் தது. எல்லாம் கண நேரே காலந்தான்.

தூயோன் உடலம் துடித்தது. உக்ரம் கொண்ட புலி, உடலின குருதியை உறிஞ்சியது. அபபோதே ஆன்மா, அவன் மாபெரும் உடலை மறந்தது. புலியும் ஓடித் தன் குகையுள் புகுந்தது.

பொழுது விடிந்தது. ஆகுகி, குடிசையி லிருந்து வெளிபபட்டாள். சின்னா பின்னமாகி, கணவன் தேகம் சிதைந்து கிடநதது. எடுபபான பல உறுபபுகள் இல்லை. என்ன வேதனை! கண்ட மனம் கனனறது. பதைத்துத் துடித்த பாவை, ஐயோ நாதா! என்று அலறி அழுதாள்.

வீரிட்ட ஓசையால் விழித்த முனிவர், உள்ளிருந்து வெளி வந்தார். விவரம் அறிந்த அவர் மனம், வேதனைப் பட்டது.

எனககு இடமளிதத ஆகுகா! இரக்கம் மிக்க உனக்கு, அநியாய மரணமா? ஆ! நீ இறைஞ்சிய இறைவிக்கு இரக்கம் என்பதே இல்லையா? எனறு, கலகல கண்ணீர் சிந்தினார்.

---

எநத வழியாலும் இனபாம், மனோதாமம
சொநதமெனக கொணடார்ககே எனனும் சுருதியதே.

அது கேட்டு ஆகுகி அலறினள். ஸ்வாமி! புனித தங்கள் திருவாக்கால், அமலை கருணையிலாள் என்று அறி விக்க வேண்டா! அம்பிகை திருவுளம, அறிய நம்மால் ஆவதுவோ?

ஆகுகீ! அவனும் குடிலுள் தங்கி யிருக்கலாம். எதற்கு அவனை வெளியே அனுப்பினை?

அடியாள் அனுப்பவில்லை. என்னையுந்தான் அழைத் தார். பெண் பிள்ளையை, இரவில வெளியே விடுதல் பிழை என்றீர்கள். அடுத்துத் தியானததில் ஆழ்நதீர்கள..

உயர்ந்தோர் பளளிகொளளும் போது, ஒதுங்கி யிருப்பது முறை என்று. எண்ணியது அவர் திருவுளளம். தங்கள் கட்டளையை ஏற்ருர். என்னையும் குடிலுள் இருததினர். விலங்குகள ஓசையால, தஙகட்கு விழிப்பு நேராதபடி, அவை களை அச்சுறுத்தித் துரதத, தாம் ஆயுதபாணியாயத தனித்தார். தன்னை மறந்து, அவர் துயிலில் ஆழ்ந்திருக்க வேண்டும். அது தான் சமயமென்று, கொடும்புலி ஒன்று அவரைக் கொன் றிருக்க வேண்டும். ஆம். அபபடித்தான நடந்திருககும்.

தவம் சிறந்த தங்கட்கு உதவிய என் கணவர், தன் கடமை நிறைவேற்றியவர் ஆகிருர். அதன பயனுக, அவர் ஆன்மா சிறந்த கதியிற் சேர்ந்திருக்கும். இனி அவரைப் பினபற்றுவது என் கடன் எனருள்.

அதுகேட்ட முதன்மைத் தபோதனர், உன் கடனு! என்ன சொல்கிருய்? என்ருர்.

ஆகுகி, பதிலுரைததிலள். அவர் காணத் தீயை மூட்டி னள். நீராடி, ஈரச் சேலையுடன், வளர்த்த தீயை வலம் வந்தாள்.

அகில லோக காரணீ! நல்லோரைக் காக்கும் நாரணீ! ஜகதம்பா! என்பதி, உனது பக்தர் அல்லவா! அவர் ஆத்மா

---

எட்டியமட் டும்பாயும் ஈட்டி ; பாதாளம்
மட்டும் பண்ம்பாயும் என்னுமிந்த மாநிலமே.

சாந்தி யடையச் செய்! சாம்பவீ! அவரை அடியாள் தொடர அருள் என்று, வெம்பும் குரலொடு தீயில் வீழ்ந்தாள்.

செய்வது தோன்ருது திகைத்த முனிவர், ஆடாது அசையாது சிலைபோல் அமைந்தார்.

தேவி திருவருள், ஆகுகன உயிரை, நிடத நாட்டு மனனர் மைநதனுக மலரச் செய்தது. அவனே பிற்காலத்தில், முதலெழு வள்ளலான நளச சக்ரவர்த்தி எனனும பெயரை எய்தினன்

ஆகுகி ஆன்மா, அம்பிகை அருளால, விதர்ப்ப நாட்டு வீமன் மகளாய்ப் பிறந்தது.

தம்பதிகள் பிரிவிற்குக் காரணமான யோகியார், அடுத்த பிறப்பில், முன்னை உணர்வுள அனனம் ஆயினர். அப பிறப்பில், தூது சென்று, தமயந்தி நள தம்பதிகளை ஒன்று சேர்ததார். அவ்வளவில் அவர் பவம் அகனறது.

எஞசிய கன்மத்தைக் கலிபுருடனுல அனுபவித்த இருவரும், கடுமைச் சோதனையிலும், நேர்மையைக் காத்துக் கலியை வெனறனர். ஆர்வத்தொடு தன்னை வழிபடட தம்பதிகளை, அரச போகத்தில் ஆழ்த்தினள் அம்பிகை. அதன பின்னும் நள தம்பதிகள், இறைவியை வழிபட்டு, வாழும் இனபம் கொண்டு வாழ்ந்தனர். இறுதியில, பிறவா நிலையில், இறைவி யடிமலர் நிழலில இனபம் கண்டு இருநதனர். எநத வகையிலோ மரணம் எய்தும். (சாவு என்பது சட்டை மாறறமே.) அரிய புண்ணியப் பயனை அடுதத பிறப்பில் அனுபவிக்கச செய்து, அதன் பின் வீடுபேறு விளையச செய்வது விமலை திருவுளம் என்று, வரலாற்றில் அமைதி காண்கினறுர் அறவோர்கள்.

வாழ்க தேவிதாசர்கள்.

ஓம்.

---

ஆணிவே லால்வெற்றி ஆவதினும், கையிலுள
காணிப்பொன் கொண்டென்றும் சாதிப்பர் காரியமே.

# உபநிஷதங்களின் உள்ளொளி

(ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி.)

கதோபநிஷத்தின முதல் நான்கு வலலிகளேயும் இதுவரை நோக்கினேம். ஆத்ம அறிவு பெற வேண்டியதன் அவசியத்தையும், ஆத்ம ஸவரூபததையும், இதை உணர்ந்தவன் அடையும் சுகத்தையும், இதை அடையாதவனின அபாக்கியத்தையும் காலதேவன நசிகேதஸ்ஸுக்கு நனகு விளக்கினன. சென்ற வலலியின் இறுதியில மலேயில் விழுந்த மழையுடன, ஆத்மசக்தியை விரயம் செய்வோரை தருமதேவன ஒப்பிடடுப் பேசினதைக் கண்டோம். அதற்கு முற்றிலும் மாருக ஆத்மஞானம பெற்ற பெருமக்களேப் பற்றி விளக்க ஓர் உபமானம் கூறபபட்டது. நல்ல நீரோடு கலநத நீர்தானும் ஏற்றமும் பெருமையும் அடைவதைப்போல, தனித்திருக்கும் ஆத்மா எங்கும் வியாபகமாகவுள்ள பரமாத்மாவோடு கலந்து, தன் தனித்தனமையை இழந்து, பூரணத்துவத்தைப் பெறுகிறது எனபதைக் கண்டோம். இனி, ஆத்மா எங்குள்ளது? எப்படி உளளது என்பதற்கு மற்ருெரு அழகான உதாரணம் கொடுத்து விளக்குகிருன காலதேவன்.

நகரம் ஒனறிற்குப் பல பக்கங்களிலிருந்தும் நுழைவதற்காகப் பல வாயிலகள் இருக்கின்றன. அநதந்த வாயிலேக் காப்பாற்றவும், அந்த வாயிலுக்கு உரிமையாளரும் இருபபார்கள். நகரத்தைத் தனக்குச் சொநதமாகக்கொண்ட அரசன ஒருவனும் இருப்பான். அவ்வரசன நகரை ஆளபவனுக இருப்பான். அவனுடைய ஏவலுக்கு உடபட்டு இருப்பது நகரம். இது போல சரீரம் எனற நகரத்தை ஆளுகிருன ஆத்மா எனற அரசன். ஸரீரத்தை ஒன்பது வாயில கொண்ட கோட்டை எனறு சிததாகளும் பக்தர்களும் - ஏன - பகவான் ஸ்ரீகிருஷ்ணனுமே கூறியுளளனர் (Gita V - 13) 'எண்சாண் உடம்படியோ ஏழிரண்டு வாசலடி' என அழுகணிச் சித்தரும் - 'ஒரு முழும் உளள குட்டம் ஒனபது துறைஉடைத்தாய்' என அப்பர் பெருமானும், 'ஊனிடைச சுவர்வைதது என்பு தூண்

---

பழிபிறங்கும் செயகை, பலலிளிக்க வைக்கும் ;
வழிமயக்கும், வாழும் வழிமறைக்கும் நிச்சயமே.

நாட்டி, உரோமம் மேய்ந்த ஒன்பது வாசல், தானுடைக் குரம்பை' எனத் திருமங்கை ஆழ்வாரும் கூறுவதைப் பார்க்கிறோம். கண் இரண்டு, காதுகள் இரண்டு, மூக்குத்துளைகள் இரண்டு, வாய் ஒன்று ஆக 7 வாயில்கள், மலஜல வாயில்கள் இரண்டு ஆக ஒன்பது எனக் கணக்கிடுவார்கள். இவ்வொன்பதுடன் நாபி யையும் பிரம்மரந்திரம் என்ற கபாலத்துளையையும் சேர்த்து மொத்தம் பதினொன்று எனக் கணக்கிடுகிறான் காலதேவன். வாயில்களுக்கு வாயிற்காப்போன் போல ஒவ்வொரு இந்திரி யத்துக்கும் உரிய தேவதைகள் உண்டு. இவற்றினோடு எவ் வித சம்பந்தமும் இல்லாமல் தனித்து நிற்பவன் ஆத்மராஜன். அவன் பிறப்பற்றவன். அவனது அறிவு மாறுதல் அற்றது. வளையாத நேர்முகமானது.

"புரமேகாதசீ த்வாரம் அஜஸ்ய அவக்ரசேதஸ"

இப்படிப்பட்ட மாறாத, அழியாத, கோணாத, குறுகாத அறிவுடைய ஆத்மன், பதினொரு வாயிலுடைய இத்தேசமான பட்டணத்தில் சாக்ஷியாக வீற்றிருக்கிறான் என்பதை உணர்ந்து அவனை வழிபடுபவர்கள் எய்தும் பயன் யாது? என்ற கேள்வி நம் உள்ளத்தில் எழுமல்லவா அதற்கு விடையும் தொடர்ந்து வருகிறது. அவனைச் சார்ந்திருப்பவர்கள் - "அதாவது வழி படுபவர்கள் துக்கிப்பதில்லை. அவர்கள் அறியாமையின் தளை களிலிருந்து விடுபடுகிறார்கள். அவர்கள் விடுதலை அல்லது விமோசனம் பெறுகிறார்கள். இந்த ஆத்மா அது (பரமாத் மா)வே.

"அனுஷ்டாய ந சோசதி விமுக்தச்ச விமுச்யதே ஏதத்வைதத்"

மின்சாரம், தான் தங்குமிடத்திற்கேற்ப தன் வடிவை மாற்றிக் கொள்வதை நாம் காண்கிறோம். விளக்கில் ஒளி யாகவும், காற்றில் அலையாகவும், தொலைபேசியில் ஒலியாக வும், அடுப்பில் நெருப்பாகவும், அமுக்கியில் (Iron) சூடாக வும், விசிறியில் அசைவாகவும் இப்படித் தன் வடிவை அது பல பாங்கில் மாற்றிக் கொள்கிறது. இதைப்போலவே ஆத்மா - ஸர்வ வ்யாபகமான ஆத்மா - தன் வடிவத்தைத் தான் தங்குமிடத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறது.

---

அஞ்சச்செய் நோய்காட்டி ஆள்சாய்க்கும் காலத்தில,
நஞ்சுண்டான் தாள்மலரில் நம்பிக்கை வைப்போமே.

நம் உடலாகிய பட்டணத்தில் மாத்திரம் அது தங்கவில்லை. விண்ணிலும், மண்ணிலும், காற்றிலும், கனலிலும் அது உள்ளது. எங்கெங்கு எப்படி எப்படி அது உள்ளது என்பதைக் கதோபநிஷத்தின் ஐந்தாவது வல்லியில் 2வது மந்திரம் உணர்த்துகிறது. ''விண்ணில சூரியனாகவும், ஆகாயததில் வாயுவாகவும், பூமியில அக்கினியாகவும், வீட்டில் அதிதியாகவும், மனிதருள்ளும், தேவரிடததிலும், சத்தியத்திலும், வெளியிலும், நீரிலும், நிலத்திலும், மரஙகளிலும், என-மலைகளிலும் அவன் பிறக்கிருன. அவனே சத்தியமானவன. மிகமிகப் பெரியவன எனறு ஆத்மாவின் சர்வ வியாபகததுவம விளககப படுகிறது. மேலும் தொடர்கிருன தர்மராஜன,

அவனே (ஆத்மாவே) தேகமையத்தில் நின்று பிராணனை மேலே அனுபபுகிருன் அபானனை கீழே தள்ளுகிருன. அவனை தேவர்கள வணஙகுகிறாகள். இங்குப் பிராணன எனபது மூசசு மாத்திரமனறு. அது சததியாகும். மூச்சு, பிராணன எடுக்கும் பலவடிவங்களில் ஒனறு தானே அல்லாது மூசசு பிராணனாகாது. பிராணனை 5 முக்கிய பிராணன்களாகவும், 5 உபபிராணனகளாகவும் பிரிப்பார்கள். பிராண, அபான, ஸமான, உதான, வ்யான எனற ஐந்தும் பலரும் அறிவதே. உள்ளே மூச்சிழுப்பது பிராணன் முச்சை வெளியே விடுவது அபானன். ஸமானன ஜீரணிக்கிறது உதானன ஓசை வடிவாக (குரல்) ஆகிறது. ரதத் ஓட்டததைச செயவது வியானன. இந்த ஐநதொழிலும் ஆற்ற மையககளமாக இருப்பது இதயம். இதயததின வெளியில (தகராசத்தில்) ஆதமா தஙகி இருநது கொண்டு பிராணனை இயக்குகிறது. இந்திரியங்க ளெலலாம் தததம் தொழிலை முறையாகச் செயகின்றன. அவை ஆத்மாவிற்கு ஏவலாட்களாகப பணிபுரிவதையே ''விம்வே தேவோ உ'பாஸதே'' எனற சொலமூலம் இஙகு காலன குறிபபிடுகிருன. எல்லா இந்திரியஙகளும் விஷயஙகளை நுகாந்து சென்று அவற்றின சுகத்தை ஆத்மாவிடம் அர்பபணிக்கின்றன, சிற்றரசர்கள் பேரரசனுக்குத கபபம் கட்டுவதுபோல. புறததிலுள்ளவற்றைச சோதது ஆத்மாவுககுத கொடுப்பதையே தேவர்கள் ஆத்மாவைப பூஜிக்கின்றனர் எனற சொல்லால்

---

நற்குடிப்பண் பிலலாதார, நாகரிகர் போல்நடித்து,
தற்பெருமை தோற்றுவிததுத் தாமழிதல் நிச்சயமே.

காலன் குறிக்கின்றான். ஆனால் இவ்விந்திரியங்கள் ஆத்மா என்ற தலைவன் இல்லாதபோதில் எவ்வித செயலும் செய்ய முடியாது. உடலைத் துறந்து ஆத்மா செல்கையில், எது மிஞ்சுகிறது? இந்திரியங்கள் அழிகின்றன. மனம்," புத்தி, சித்தம், அகங்காரம், பிராணன், செயல, சிந்தை எல்லாம் அழிகின்றன. ஆனால் ஆத்மா மாத்திரம் அழிவதில்லை. எப்படி ஒரு நகரத்தின அரசன அதிலிருந்து ஓட்டப்பட்டால் அந்த நகரமே பாழாகின்றதோ அதுபோல, ஆத்மராஜன் சென்றதும் உடல் பாழாகிறது. அதைச் சார்ந்த இந்திரியாதிகளும் அழிகின்றன. எனவே, பிராணனாலோ அல்லது அபானனாலோ மனிதன வாழ்வதில்லை. இவ்விரண்டும் எதைச் சார்ந்து நிற்கின்றனவோ அதனாலேயே மனிதன் வாழ்கிறான. இவை சார்ந்திருக்கும் ஒன்று எது? அதுவே ஆத்மா. அது இவவுடலைத் துறந்து சென்றபின, அதற்கு என்ன ஏற்படுகிறது என்பது தானே நசிகேதஸ் கேட்டகேள்வி. அதற்கு விடை கூறத் துவங்குகிறான் காலதேவன்.

"நல்லது கௌதம! ஆச்சரியமானதும், சனாதனமானதுமான இந்த பிரம்மததையும், இறந்தபின ஆத்மாவிற்கு என்ன ஏற்படுகிறது என்பதையும் உனக்கு விளக்குகிறேன்.

சில ஜீவர்கள் இறந்தவுடன் மற்றொரு கருவைச சென்று சேர்ந்து வேறொரு உடலைப பெறுகின்றனர். ஆனால் சில ஜடவஸ்துக்களிலும் புகுகின்றன. அதனதன கர்மததிற்கேற்ப இச்செயலானது அமைகிறது. "யதாகர்ம" அவர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்பவும் அமைகிறது. "யதாஸ்ருதம்"; என்று பேசுகிறான். கர்மத்தின் தனமையை, கர்மநியதியைப் பற்றி முன்பே முதல் வல்லியிலேயே காலன் பேசினான். "தானியஙகளைப் போன்று மானிடர்கள அழிந்து மீண்டும் பிறக்கின்றனர்" என்று, செய்த வினைக்கு ஏற்ப இனிவரும பிறவி அமையும் என்று குறிப்பிட்டுள்ளான. முந்தின பிறவியில் செய்த வினைகளும் சேர்நத அறிவும் இனிவரும் பிறவியை அமைக்கிறது. அவர்கள் மண்ணுலகில் மக்களாகவோ, அல்லது விண்ணுலகில தேவர்களாகவோ, இல்லையேல் அறிவின் விகசிபபு ஏதுமில்லாத மரம், கலபோன்ற ஜடமாகவோ

---

ஓவியத்தில் தெய்வ உருஎழுதிப் பூசிப்பர்
காவியத்தில் அத்தெய்வக் கருத்தறிந்து வாழ்பவரே.

எபபடியும் பிறக்க நேரிடும். ஆனால் நியதியின்றிப் பிறக்க மாட்டார்கள். செய்த வினைக்கேற்பவே அது அமையும். சேர்ந்த மெய்யறிவுக்குத் தகுந்த பாஙகிலேயே அடுத்துவரும் ஜன்மமும் அமையும்.

அடுதத மந்திரம் ஆத்ம தத்துவததை மேலும் விளக்கு கிறது. எல்லாவற்றிற்கும் எல்லையாக இருப்பது ஆத்மா. அதற்கு அப்பாலே யாரும் போக இயலாது. அதுவே பரிசுத்த மானது எனவும், பிரம்மம் என்றும் அழைக்கப்படுகிறது. அதுவே நம் உடலில் சாக்ஷியாக இருக்கிறது - ஜாக்ரதை, ஸ்வப்னம், ஸுஷுப்தி எனற மூன்னிலைகளிலும் இதுவே நமக்கு சாக்ஷி. கனவையும் நனவையும் அறிந்து, இனபமும் துன்பமும் அனுபவிக்கிறோம். அதேபோல ஆழ்நத தூக்கத் தையும் அதன் சுகத்தையும் அனுபவிக்கிறோம். "அப்பாடா! மிக நல்ல உறக்கம். ஆடாது அசையாது நன்கு தூங்கினேன். என்ன நிம்மதி! என்ன சுகம்!" என்கிறோம். நனவிலும் கன விலும் அழியாது இருக்கும் நமது மனம், ஆழ்ந்த உறக்கத்தில் அழிந்து போகிறது. நனவிலும் கனவிலும் மனதைக் கருவி யாகக் கொண்டு சுகிபபதும் ஆத்மாவே. ஆழ்ந்த உறக்கத் தில் மனம் உறங்கிவிட்ட போதிலும், அமைதியாக உறங் கினோம் என்ற உணர்வு நமக்கு ஏற்படத்தான் செய்கிறது. எது இவ்வாறு உணர்கிறது? நம் ஆத்மாவே இவ்வாறு உணர்கிறது. ஆழ்ந்த தூக்கத்தில செயல் ஏதுமற்ற நிலையில் ஆனந்தம் தோன்றக் காரணம் என்ன? ஆதமா ஆனந்த ஸ்வரூப முடையது ஆகையால் ஆழ்ந்த உறக்கத்தில் அவ் வானநதம் பிரதிபலிக்கிறது. ஆத்மா அதவைதமானது. அதா வது இரணடு அற்றது. அதன் தன்மை அழியாத ஆனநதமே.

சுருதிததாய, தனமககள் எல்லாம் ஒன்று; எங்கும் ஆத்மா என்ற ஏக உணர்வு பெறவேண்டும் எனற பெருங் கருணையோடு பல பாஙகில் ஆத்மாவின ஏகத் தனமையைப் பலபல உதாரணஙகள காட்டி விளக்குகிறாள். இந்த உண் மையை உணரவேணடுமானால், வீணான வாதங்களை விடுத்து அமைதியாகவும் ஆழ்ந்தும் சிந்திக்க வேண்டும்.

---

உம்போல் பெருமை உண்டோ உலகிலென,
தம்முனனர் கூறுமொழி, தாம்மறுப்பர் தக்கோரே.

கற்றகல்வியின் திறமையைத் விவாதித்து விளக்கிக்காட்ட விரும்பக்கூடிய பண்டிதர்களின வாதங்களால், நமக்கு எவ் விதப் பயனும் ஏற்படாது. அமைதியாகவும் ஆழ்ந்தும் சிந்திக்கக் கூடிய அத்யாதம அன்பர்கள ஒனறுசேர்ந்து சிந்தித்தால் நல்ல பயன் ஏற்படும். அவர்கள் ஆழ்ந்து சிந்திபபதற்கென்று கதோபநிஷத்தில் ஆஙகாஙகு சில நலல உதாரணங்கள கூறப் படுகின்றன. அவறறில் ஒன்று அடுத்து வரும் மந்திரம்.

ஒரே நெருபபு, தான எரிககக் கூடிய பொருள்களுக்கு ஏற்ப பலபல வடிவம் எடுப்பதுபோல, ஆதமா ஒன்றுக இருபபினும், தான புகும் வடிவிற்கு ஏற்ப அமைகிறது. ஆனால் அவற்றிற்கு வெளியே, அதாவது உருவததிற்கு அப்பாற் பட்டதாகவும் இருக்கிறது.

அக்னிர் யதைகோ புவனம் பரவிஷ்டோ ரூபம் ரூபம் ப்ரதி
ரூபோ ] பபூவ ஏகஸ்ததா பூதாநத ராதமா ரூபம் ரூபம்
ப்ரதிரூபோ பஹிசச ||

இந்த மந்திரத்தை எல்லோரும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். நெருபபு எதை எரித்தாலும எரிக்கும். வஸ்துவின் குணம் நெருப்பைப பற்றுவதில்லை. அது தன பரிசுத்தத தன்மையை இழவாது இருக்கிறது அதுபோல ஆத்மா எதனுள் இருப பினும், பலபல உபாதிகளைத் தனமீது போடடுக கொணட தாகவும், மனம், இநதிரியுங்கள், பிராணன், சரீரம் இவற்றிற குள் புகுந்து நிற்பதாகத் தோனறினாலும், அதற்கு அது புகுந்த வஸ்துவின குணம ஒனறும் பறறுவதில்லை. அது ரூபத்தினால் சற்றும கல்மஷம் அடைவதில்லை. எனவே எலலாவற்றிற் கும் உள்ளே அது இருப்பினும், எல்லாவற்றிற்கும் அப்பால எதற்கும் எட்டாத தொலைவில இருககிறது. "எப்பொருட் கும் நினறு யார்க்கும் எயதாது, நானமறையின சொற் பொருளாய் நின்றார்" என்ற ஆணடாளின வாசகம் எத்தனை *உண்மையான உயிருள்ள விளககம்!*

நெருபபை உபயோகிததுச் சொன்ன அதே விளக்கம், அடுத்து வரும் மந்திரததில வாயுவை உதாரணமாகக் காட்டி விளக்கப் படுகிறது. காற்று எங்கு வீசினும், அப்பிரதேசத்

---

நலந்தீங் குணராமல வம்புசெயும் நாசக்
கலதிகட்கே காலம் அறிவுகற் பிக்குமரோ.

ழிலுள்ள சுகந்த, துர்க்கந்தங்களில் மாஇபடாது மேலும் வீசுவது போலவே ஆத்மாவும் உள்ளது. அடுத்த மந்திரத்தில சூரியன் உதாரணமாகக் காட்டப்படுகிருன். உலகுக்கெல்லாம் கண்ணுக இருக்கும் சூரியன (சூரியன் காட்டிக கொடுககாவிடின் நம் கண் எப்படிப் பொருள்களைக் காணமுடியும்?) எப்படிக்காணும் கண்ணின குற்றத்தாலோ அல்லது தான் காட்டும் பொருள் களின் குற்றத்தாலோ மாசு அடைவதில்லையோ அதுபோலவே ஆத்மாவும் எலலா உயிர்களுக்குள்ளும் நிறைநதிருபபினும், உலக சுகதுக்கஙகளினுல் சற்றும் மாறுவதிலலை. அதறகு மாருக இசசுகதுக்கஙகள் தொடாத தொலைதூரத்தில இருக் கும். சுகிப்பதும் துக்கிபபதும் உடலே. அதாவது இந்திரியங் களைக் களமாகக் கொண்ட மனதே. ஆத்மா சாக்ஷி மாத்திரமே என்று மூன்று பாகுபாடுகள உண்டு. செய்பவன், செயல், அதனுல் வரும்பலன. இவற்றை ஆத்மா அனுபவிபபதாக நாம் தவருக எண்ணுகிருேம். கர்த்தா, கிரியை, பலம் என்ற மூன்றுக்கும் புறம்பானது ஆத்மா. அது ஏதும் செய்வு தில்லை. எனவேதான அதற்கு அகர்த்தா (ஏதும் செய்யாத வன்) என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது அது ஏதும் அனுப விப்பதில்லை. ஆகவே அதை அபோக்தா எனகினறனர். அது எதனேடும் பற்று வைப்பதிலலை. (அதனுல் அஸங்க நிர்லிபத) எனற பெயரினை ஆத்மா பெறுகிறது. எதையும் அனுபவியாது எதனுடனும் பறறறறு இருககும் ஆத்மாவை எல்லாவற்றிலும் பற்றுடையதாகவும், எலலாச் செயலும் செய்வதாகவும் கருதி மோகம் அடைதல் கூடாது. ஆத்மாவை அகர்த்த, அபோகத, அசங்க ஆத்மா எனறு உணாத்தியவர் ஆசாரியர் சங்கரா. இதை விவர்த்தவாதம் எனக்கூறுவார் கள். ஆத்மாவின இததனமையைப பார்த்தனுக்குச் சாரதி யான பரநதாமன் வெகுவிரிவாக ஸ்ரீமத் பகவத கீதையில 2வது அத்யாயததில விளக்கியுளளார். இந்த அறிவே அத்யாத்ம அறிவின அஸ்திவாரம். ஆத்மாவின் தொடர்பற்ற, பற்றற்ற, தனித்த, ஸாவ வயாபக, அத்வைதத் தன்மையை முதற்கண் அறிவினுல் அறிந்து கொள்பவனே அத்யாதம ஞானத்திற்கு அஸ்திவாரம் போட்டவனுகிருன். இந்த அறிவு

---

அன்பால் எதையும் சாதிக்கும் ஆற்றலுளார்
இன்பார்நது ஞாலததில் எனறும் மகிழபவரே.

வெறும் வாசா ஞானமாகாது, அனுபவ ஞானமாக மாறுமாறு பாடுபட்டுப் பயன் கண்டவனே ஸ்திரப்ரக்ஞன். அல்லது நிலைத்த மதியுடைய நிபுணன் ஆகிறான்.

ஏகோ வஸீ ஸர்வ பூதாந்தராத்மா ஏகம்
ரூபம் பஹுதா: ய: கரோதி
தமாத்மஸ்தம் யே னுபஸ்யந்தி தீராஸ் தேஷாம்
ஸீகம் மாய்வதம் நேதரேஷாம் !
அவன் ஒருவன். அவனே இதை ஆள்பவன்.
அவனே உயிர்வாழும் பிராணிகளில்

உள்ளுறை ஆதமா. உலகத்தின் துன்பங்களால் மாசுறுவதில்லை. எந்தத தீரர்கள் (ஞானிகள்) இவனை தங்களுள் தங்கள் ஆத்மாவாகக் காணுகின்றனரோ அவர்கள் ஸாஸ்வத சுகத்தை அடைகின்றனர். விவேகமற்றவர்களும், புறப்பொருள் களில் ஈடுபட்டவர்களுமாகிய அக்ஞானிகள், ஆத்மாவின் இந்த நித்திய சுகததை அனுபவிப்பதில்லை. அவர்களுக்கு ஆத்மா அஞ்ஞானத்தினால் மறைக்கப்பட்டதாக இருக்கிறது. எந்த ஞானிகள இவ்வஸதுவை அநிதயததுள் நிதயப பொரு ளாகவும், சேதனங்களுள் அசேதனமாகவும், அநேகத்துள் ஏக மாகவும், பலருடைய காமங்களை (ஆசைகளை)த்தருபவனாகவும், பூர்த்தி செயபவனாகவும், தங்கள் ஆத்மாவிலேயே வீற்றிருப பவனாகவும் காண்கின்றனரோ அவர்கள் ஸாஸ்வதமான சாநதி யைப பெறுகின்றனர். மறறவர்க்கு இது கிட்டுவதில்லை.

இன்றைய உலகில் சாந்தி. Peace - என்ற சொல்லைப பலரும் சொல்கின்றனர். 'சாந்தி நிலவவேண்டும் - எங்கும எபபொழுதும், என்றும்' என்பது பலதலைவர்களின கூக்குரலாக இருக்கிறது. Peace - என்ற சாந்தியைப பெற மகாநாடுகள் கூட்டி சாந்திககுப பதில் அந்த சாந்தியை Peace - பினனப் படுத்தித்தான் கலைகின்றனர். சாந்திககு அடிபபடை ஆதம அறிவு. சாந்தியைப்பெற விரும்புபவன் முதலில் எங்கும் எல்லா உயிர்களிலும் இருக்கும் பொருள் தனனுளளே இருக்கும் ஆத்மா என்பதை அறியவேண்டும். தன்னையே துனபுறுத்திக்கொள்ள எந்த மனிதனும் தயாராக இருக்கமாட்

---

நாடெனினும் காடெனினும், நனனட்பு சேர்தலுறின,
வீடுபேற் றினபம் விளையவழி யாகும்மே.

டான். நீவேறு உலகம் வேறல்ல. உன்னுள் இருக்கும் ஆத்மாவே உலகில் எல்லாமாக இருக்கிறது என்பதை அறிந்து கொள் என்பதே உபநிஷதங்களின் கோஷம். தன்னுள் அமர்ந்திருக்கும் ஆத்மா, அநித்தியத்தில் நித்யமாக, அறிவுள் அறிவாக, உயிருள் உயிராக இருக்கிறது என்பதை அறியுங்கால், எதனாலும் அழியாத சாந்தி உண்டாகிறது. இந்த சாந்தி எல்லோருடைய உள்ளத்திலும் இருந்தால், சண்டைக் களமாக இருக்கும் உலகம் சாந்தி நிலமாக மாறுமல்லவா. அந்த நாள் எந்த நாளோ ?

---

## 4. முசுகுந்தர்

### [கந்தவேட்கினிய முசுகுந்தனுர்க் கடியேன்]

(தணிகை. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

கயிலையிற் சிவபிரானும் தேவியும் வீற்றிருந்த சோலையில் ஒரு முசு (ஆண்குரங்கு), அதன் நல்வினைப்பயனால வில்வ இலைகளைப் பறித்துப் பெருமான மீதும், தேவிமீதும் சொரிந்தது. "அக் குரங்கு நம்மை வழிபடுகின்றது" என்று இறைவன் கூற, தேவி அதனை ஞானவிழிகொடு நோக்கினள். நோக்கினவுடன அது ஞானம் பெற்றுக் கீழே இறங்கிவந்து, "அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளவீராக" என வேண்டிற்று. "நீ எம்மை வில்வ இதழகளால வழிபாடு புரிந்தனை ; அதனுல, நனனெறியில ஆடசி செய்யும் வேநதர் வேந்தனுக உலகிற் பிறப்பாயாக" என இறைவன் திருவாய மலர்ந்தனர். முசு, "பெருமானே! நித்தம் உங்களைத் தரிசித்திருந்த நாள் உங்களைப் பிரிந்து எஙஙனம் இருப்பேன்? செலவத்தில் மயங்கி நான் உய்யும் வழியை இழத்தல் கூடுமே" எனத் துதிகக, இறைவன் "நீ பூமியிற் சிலகாலம் வாழ்ந்து பின்னர் இஙகு மீளுக" எனறனர். முசு "இந்த முசு முகத்துடனே நான மண்மீது பிறக்க அருளுக ; அபபோதுதான் ஆணவம் என்னைப் பீடிக்காது" எனறது. 'நனறு' எனறனர் இறைவர். முசுவும் உலகை ஆணடுவந்த அரிச்சநதிரன்

---

எவர்மனமும் நோக எதுவும்செய் யாமல,
சிவமெண்ணும் வாழ்க்கையினர் சீர்பெறுதல் கண்டாமே.

என்பவனுக்கு மருமானாக உலகில் உதித்து முசுகுந்தன எனப் பேர் பெற்றது. அங்ஙனம் பெயர் பெற்ற முசுகுந்தர் கருவூரைத் தமது ராஜதானியாகக் கொண்டு இந்திராதி தேவர்கள் வியந்தேதத உலகை ஆண்டனர். அங்ஙனம் உலகை ஆண்டுவாந்த காலததில, சூரனை அட்டபின்பு முருகவேள் திருப்பரங்குன்றம் வந்துள்ளாரென்றும், அங்குத் தேவசேனை யைத திருமணம செயயப் போகின்றார் எனறும், திருமணத் திற்கு வரவேண்டும் என்றும் முசுகுந்தர்க்குத தூதர்கள் மூலம் அழைப்பு வந்தது. முருகவேளின அடித்தாமரையை மறவாத முசுகுந்தா முருகவேளுக்குத திருமணம் எனக் கேட்டவுடன் அளவிலா மகிழ்சசி எயதி, அழைகக வநத தூதாகளை நோக்கி, நுஙகளுககு,

> " ஈண்டை மாநிதி யாவும் நல்குகோ
> காண்டகும் குடை கவரி நல்குகோ
> ஆண்டிருந்த என் அரசு நல்குகோ
> வேண்டு கின்றதேன் விளம்புவீர் " என்றார்.

(கந்தபுராணம். 5-2-55)

இங்ஙனம் மட்டற்ற மகிழ்ச்சியுடன் அன்பு ததும்பத தூதர் களுக்கு வேண்டிய சிறப்பினைச செய்து, ஆயிரக்கணக்கான காணிக்கைகளை மாதாகள் ஏநதிவர முசுகுநதர் கருவூரை விட்டுப் புறபபட்டு மதுரைமாநகா வநது சோநதனர். அங்கு சொக்கநாதரையும், அஙகயற்கண்ணியையும் தரிசித்து இந்திர ஞதி தேவர்களும், வசிஷ்டராதி முனிவர்களும் எதிரேற்பத் திருப்பரஙகுனறததை அடைந்தனர். குமரவேளைத் தரிசித்துப் பாதகாணிக்கை அனைத்தையும் செலுத்தி ஒரு புறமாக நின்றனர். முருகவேள் " நீ தேவ கணஙகளுடன கூடியிருந்து நமது திருமணததைக கண்டு செல்க " எனக கூறினர். முசுகுநதரும் தமது புறக்கண் காண, அகக்கண் மகிழ முருக வேளின திருமணக கோலத்தைக் கண்டு கழிபேருவகை பூத்தனர். பினனா, அத்தலததில் சிலநாள தங்கித் தமது குல குருவாம் வசிஷ்டமுநிவரிடம் கந்த விரத முறைகளை யெல்லாம் அறிந்து பயினறனர்; முருகப பெருமானிடம் பிரியாவிடை

---

மெய்யறியார்,வாய்மையுண்மை மென்மைநுண்மை தாமறியார் கையாலா காதார்க்கு, வாயதிகம் கண்டாமே.

கொண்டு பரங்குன்றத்தினின்றும் புறப்பட்டு, வழியில் பிற தலங்களைத் தரிசித்துக் கருவூர் வந்தடைந்தனர். கருவூரில் ஆண்டுகள் பல கந்தவேள் விரதங்களாகிய சுக்ரவார விரதம், கார்த்திகை விரதம், கந்த சஷ்டி விரதம் ஆகிய விரதங்களை நன்கு நோற்றுவரக், கோலக்குமரன் மயில்மீது எழுந்தருளி அவருக்குத் தரிசனந் தந்து, "உனக்கு இவ்வுலகில் யாது வரம் வேண்டும்" என வினவினர். முசுகுந்தர் "நீபத் திண்டோள் வரத! உன் திருவருளால் உலகைப் புரக்கும் ஆற்றலைப் பெற்றேன், ஆனால் என்னிடம் விறல்வாய்ந்த படைவீரர்கள் இல்லை, அதனால், தாங்கள் தயைகூர்ந்து தங்களிடமிருக்கும் வீரவாகு முதலிய படைவீரர்களை எனக்கு உதவ வேண்டுகின்றேன்" என வேண்டிப் பணிந்தனர். பெருமானும் நன்றெனக் கூறி வீரவாகு முதலியோரை நோக்கி, "முசுகுந்தன் உங்களைக் காட்டிலும் என்பால் அதிக அன்புள்ளவன்; நீவிர் அவனுக்குத் துணைவராய்ப் போய் *இருப்பீர்" என்றனர். அப்போது வீரவாகு முதலானோர், "சூரர் குலத்துடன் மாறுபட்டு வெற்றிபெற்ற நாங்கள் ஒரு மானுட அரசனிடம் தொழில்புரிய மாட்டோம்." எனப் பதில் கூறினர். அறுமுகவேள் *"நம் உரை மறுத்தீர்; ஆதலால் நீங்கள் மானுடராய் முசுகுந்தனுக்குச் சேனைவீரர்களாகக் கடவீர்; பற்பகல் கழிந்தபின் நோற்று எம் பக்கல் வருவீர்களாக" எனக் கட்டளை யிட்டனர். பெருமானது வாய்மொழியினால் வீரவாகு ஆதியோர் மானிடராய் மெய்யெலாம் வியர்ப்பப் பதைபதைத்துத் தமது பிழையை நினைத்து, "பொய்யரேம் பிழை பொறுத்தருடியால" எனறு பெருமானது பொன்னடியைப் பணிந்து முசுகுந்தருக்குச் சேனைகளாக அமைந்தனர். முசுகுந்தர் தமது திருவடிகளை வந்தித்து நிற்க, அவர்க்கு நல்லருள் புரிந்து பெருமான் மறைந்தனர்.

மானுடனாக வந்த வீரவாகு, புட்பகந்தி என்பவளை வேட்டுத் தனது மகள் சித்ரவல்லி என்பவளை முசுகுந்தற்குத் திருமணம் புரிவித்தார். சித்திரவல்லிக்குப் பிறந்த குமரன்

---

* "நோற்றல் கூடிய முசுகுந்தன்
நும்மினும் எம்பால்
ஏற்றமே தரும் அன்பினன்,
எழுகடற் புவியும்

அங்கிவன்மன். முசுகுந்தர் இந்திரனுக்குத் துணையாகச் சென்று அவுணர்களை அட்டார். இந்திரன பூசித்திருந்த தியாகராஜ மூர்த்தியை, இறை அருள் துணைசெய்ய, முசுகுநதா பெற்றுத் திருவாரூரில் தாபித்து வழிபட்டார். பின்னர் அஙகிவன்மனுக்கு மு டி சூ ட் டி நோற்றிருந்து * கயிலையை அடைந்தார். வீரவாகு தேவரும், தம்பியர் எண்மரும் இலக்கருடன தஙகள் குழநதைகளை அங்கிவன்மன் பால் இருத்தித தாஙகள் அரிய தவம் ஆற்றி மாநுடத்தன்மை நீக்கிக் கந்தகிரியை அடைந்தார்கள.

முசுகுந்த நாயனர் வரலாறு முற்றும்.

---

போற்ற வைகுவான, நீவிர்கள்
ஆஙகவன் புடைபோய்
ஆற்றல் சான்றிடு துணைவராய்
இருத்திர் என்றறைந்தான்." (கந்தபுராணம்.6-23-29)

* "நம் உரை மறுத நீர்,
ஆனதோர் பான்மையால் நீவிர் மாநுடவராய்
அவனி மனனன்
சேனையாகிப புறம் போற்றியே பற்பகற்
சேர்திா பின்னர்
வானுளோர் புகழவே நோற்று நம்பக்கலில்
வருதிர் என்ருன்." (கந்தபுராணம். 6-23-31)

---

* முசுகுந்தர் வரலாற்றைக் கந்தபுராணம் தெய்வயானை அம்மையின திருமணப படலததிலும், கந்தவிரதப் படலத் திலும் காணலாம்.

முருகவேள் உலா வரும்போது வீரவாகு முதலிய தேவர் களுடன் முசுகுந்தரும் வருவதாக இலஞ்சி முருகன் உலா உடையார்—

"வீரவாகுவுடன்—பின்னரும்
மற்றை வீரர்களும் மாபூதச் சேனைகளும்
கொற்ற முசுகுந்தக் குரிசிலுடன்—பற்றுமனத்
தொண்டருடன்.........மண்டிவர" என்கின்ருர். (115)

# TIRUPUGHAZH

Tiruppughazh and its kindred works are the out-pourings of a realised saint Sri Arunagirinathar. Born of a northern Brahmin family, he settled in a village a few miles away from Tiruvannamalai. Blessed with great piety and devotion, the saint even in his early years had been gifted with rare proficiency in the mastery of the Vedas, of Vedanta Gnanam, of Tamil literature and other oriental languages and their master-works Seized with the fire of Sri Kumara Bhakthi he acquired a rare understanding in the philosophy of the Upanishads and in the incomparable art of poetry and song, and his entire works constitute a warehouse of devotion and fine arts, of universal love and human deliverance, and of the philosophy of man and the universe He stands unparalelled in the universality of God-love as the true basic approach to God and Mukthi. To him God is omnipresent, omsiscient, the haven of the true Baktha and the attainment of the true purpose of the human soul In the sweet and musical exposition in manipravalam, (admixture of Tamil and Sanskrit) he has demonstrated how the (அனுபவ) experience of God by the Bhaktha in thought, word and deed assures mukti to all He has explained how the "I" in man is the impediment to the realisation of God, and how the loss of the "I"

in man makes for the gain of cosmic God consciousness of the Bhakta. His universal message to the world is quite simple. Forget the "I". Sing of His Great name in the holy company of His devotees. The joy of heaven becomes the atmosphere about you The divine effulgence of form and spirit will overtake and land you in the eternal happiness and ecstacy of God realisation The universal love of God dissolves all fears and sorrows; for, these have no place in the intrinsic unity of God-realisation. Tiruppughazh exhorts man to sing of His great name in the Company of devotees, otherwise called Sat-Sang Lose your sense of duality in the consciousness of the one-Lord, the all living Lord of the Sat Sang Destroy all desire in the loss of all differentiation, as the world's appropriation is but your own and in this realisation of Bhakthi, feel one with God and walk the earth as a Jivan Mukta Sing, sing, sing the song of Tirupughazh, the song of Universal life and experience where individual differentiations are dissolved in the universal unity of blessed eternal joy. Muruga-Om.

*Thiruppugazh-Mani.*

ஆற்றாமை ஒன்(று,) அமையாமை ஒன்(று,)
அறியாமை ஒன்(று,) அருளாமை ஒன்(று,)
ஏத்தாமை ஒன்(று,) இசையாமை ஒன்(று,)
இன்னாமை ஒன்(று,) இருதாளையும்
போற்றாமை ஒன்(று,) அடியாருடன்
பொலியாமை (ஒன்று,) ஒருமெய்யிலே
நாற்றாய்வினைங் திடலாகுமோ ?
நாராயணா ! நாராயணா !!

No 1506 அசோகா ASOKA ஜெ.1506 Ch.1506

# Coffee
## Ours for Quality

RAW ROAST OR GROUND

**GANESH & Co., (MADRAS) LTD. MADRAS**

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

**A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.**

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 113




**குடை மார்க் பினாயில்**

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளர்:

**ஸ்பிரிட் வேர் ஹவுஸ்**

49. சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 33982

விநியோகஸ்தர்கள்:

**கார் & கம்பெனி**

1/6, செகின் லேன் பீச்,
சென்னை-1. டெலிபோன்: 22058


**அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:**

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைந்தபடியால், தயை கூர்ந்து பிலவ வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம்- 54, பந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.